12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ ot the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 1—10—1978 | இதழ் 1-3

களம் அமைகிறது; கழகக் காளையரே வாரீர்!

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பர்துகாப்பிற்காக நடத்தவிருக்கிற போராட்டம் — சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காக்க நாம் நடத்த வேண்டிய போராட்டம் — பொய் வழக்குகளை எதிர்த்து நாம் நடத்த வேண்டிய போராட்டம் — வானொலி, டெலிவிஷன் நிலையங்களில் நடைபெறுகின்ற தி. மு. கழக விரோதப் பிரச்சாரத்தை எதிர்த்து நாம் நடத்த வேண்டிய போராட்டம் — அர்ச்சகர் சட்டம்செயல்படவேண்டி நாம்நடத்தவேண்டியபோராட்டம் முற்றுப்புள்ளி வைக்கின்ற போராட்டம் — என்கிற அளவிற்கு நாம் நடத்தித் தீர வேண்டிய இந்தி எதிர்ப்புப் போராட்டம் — ஆகிய ... வைகளை நடத்தப் பணமல்ல; இலட்சக்கணக்கில் (நான் கேட்பது— இலட்சக்கணக்கான தொண்டர்கள் தேவை; ஒரு இலட்சம்பேர் சிறைச்சாலை செல்லத் தயாராக வேண்டும் (தயார்; இப்போதே தயார் — மக்கள் முழக்கம்)

அப்படி சிறை செல்லத் தயாராக இருப்பவர்கள் நாளையதினம் முதலே தங்களுடைய பெயரைத் தலைமைக் கழகத்திற்குஎழுதி அனுப்ப வேண்டும்.

-தலைவர் கலைஞர்

முப்பெரும் விழாப் பொதுக்கூட்டம் 24-9-78



அதிசய மனிதரின் விசித்திர வாதம்

★— ஜாகீர் —★

“ஒ’குப்புக் கலவரங்கள், அரிஜனங்கள் மீது தாக்குதல், தொழிலாளர் போராட்டம், மாணவர் போராட்டம் முதலியவைகளுக்கு அரசியல்கட்சிகளின் தூண்டுதல் தான் காரணமாகும்”

— இவ்வாறு கூறியிருப்பவர் வேறு யாருமல்லர்; அரசியல் உலகம் இதுவரை கண்டிராத ‘அதிசய மனித’ரான நடிக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன்தான்!

எந்த ஒரு அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும்,போராட்டங்களைச் சந்திப்பதென்பது தவிர்க்க முடியாத ஒன்று. போராட்டங்களை எதிர்கொள்ள அஞ்சுகிறவர்கள் இருக்கவேண்டிய இடம்—ஆசிரமம்! அரசியலரங்கமல்ல!

டில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில், இவ்வாறு தமிழகத்து எதிர்க்கட்சிகள் மீது அபாண்டமாகப் பழி சுமத்தியிருக்கும் எம். ஜி. இராமச்சந்திரன், “போராட்டங்கள் என்ருல் புறமுதுகிட்டோடும் கோழை” என்றஉண்மை நாடறிந்தது! ஆகவேபோராட்டங்கள் என்ருலே அவருக்கு எரிச்சல் ஏற்படுகிறது; ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

சரித்திரத்தைப் படைப்பதில் தனிநபர் பங்குமிகமிகக் குறைவானது; மாறி மாறி இடம் பெறும் நிகழ்ச்சித் தொகுப்புகளே சரித்திரமாற்றங்களையும் உருவாக்குகிறது. போராட்டங்கள் சரித்திர மாற்றத்தை நிகழ்த்தும் நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியே! சிறு விதையானது முளைத்த பிறகு மண்ணைப்பிளந்து கொண்டு செடியாகவோ, மரமாகவோ வெளிக்கிளம்புவது போல், பிரச்சினைகள் முற்றி தீர்க்கப்படாதகாலகட்டத்தில் போராட்டங்களாக வெடிக்கின்றன.ஒருவருடைய விருப்பு வெறுப்புகளுக்காக அவைகள் காத்திருப்பதில்லை.

போராட்டங்களுக்கான மூலகாரணங்களை ஆராய்ந்து அவைகளைத்தீர்த்துவைப்பதில் அல்லது குறைந்த பட்சம் — மட்டுப்படுத்துவதில்தான் ஒரு அரசியல் வாதியின் திறமை எடைபோடப்படும்.

எம். ஜி. இராமச்சந்திரன் அன்றும் சரி, இன்றும் சரி ஒரு அரசியல்வாதியாக இல்லாததால் போராட்டங்கள் என்ருலே ஒரு பெரும் பீதி அவரைக் கவ்வுகிறது!

எனவே,

போராட்டங்களை எதிர்கொள்ளத் திறனற்றவராய் பழியை எதிர்க்கட்சிகள் மீது போட்டுத் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிருர். அவருடைய ‘எடுத்தேன்... கவிழ்த்தேன்.’ பாணிப்பேச்சு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவாது. மாருக ,சிக்கலை மேலும் அதிகமாக்கும்’.

கனவுலகம் போன்ற திரை வாழ்விற்கும், பிரச்சினைகள் மலிந்த நடைமுறை வாழ்விற்கும் இடையே சிக்கித்திணறியவராய் எம். ஜி. இராமச்சந்திரன் ஊசலாடிக் கொண்டிருக்கிருர்.

திரை வாழ்வில் தனக்கு வேண்டாதவர்களை அப்புறப்படுத்தக் கையாண்ட அதே யுக்திகளை, அரசியலிலும் அவர் செலுத்தப்பார்க்கிருர். அரசியலை முழுக்க முழுக்க ‘பழி வாங்கும் படலமாகவே’ அவர் நடத்தி வருகிருர். அவருடைய கவனம் முழுவதும் இதிலேயே — பழி வாங்குவதிலேயே — குவிந்திருப்பதால் போராட்டங்களைத் தீர்க்கச் சக்தியற்றவராய் எதிர்க்கட்சிகள் மீது புழுதி வாரித் தூற்றுகிருர்.

மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், தாழ்த்தப்பட்டவர்கள்தங்கள்தேவைகளை முன்னிட்டுப் போராட்டங்கள் நடத்தினல் — ஆயுதம் தாங்கிய தன் கட்சிக்காரர்களான அ.தி.மு.க. வினரின் துணையோடு அவைகளை ஒடுக்க முயற்சிக்கும் இந்த எம். ஜி. இராமச்சந்திரன் கூறுகிருர்: ‘போராட்டங்களை அரசியல் கட்சிகள் தூண்டி விடுகின்றன...’ என்று!

விழுப்புரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் கொலை செய்யப் பட்டதும் பேரணும்பட்டில் நடந்த கலவரங்களும் ஏதோ சிறு சிறு சம்பவங்கள் தாஞம்... சில அரசியல் கட்சிகள் தான் அவைகளை அளவுக்கு மீறி மிகைப்படுத்துகின்றனவாம்...

இதுவும் எம். ஜி. இராமச்சந்திரன் முதலமைச்சர்கள் மாநாட்டில் வெளியிட்ட கருத்துத்தான். கொலை, கொள்ளை, தீ வைப்பு, கற்பழிப்பு — இவைகளெல்லாம் எம். ஜி. இராமச்சந்திரன் அகராதியில் ‘சிறு சிறு சம்பவங்கள்தான்...

— இவைகளையே ‘சிறுசிறு சம்பவங்கள்’ என வர்ணிக்கும் ஒரு முதலமைச்சரின் மதிப்பீட்டில் ‘போராட்டங்கள்’ எவ்வளவுதூரம் முக்கியத்துவம் பெறும் என ஓரளவு யூகித்துக் கொள்ளலாம்...

“மாணவர் விஷயத்தில் தலையிட வேண்டாம் என்று அரசியல் கட்சிகளைக் கேட்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்...” இவ்வாறு ஊருக்கு ‘உபதேசம்’ செய்யும் எம். ஜி. இராமச்சந்திரன் தன் பார்வையைச் சற்று சென்னைக் கல்லூரிகள் பக்கம் திருப்பக் கூடாதா? கல்லூரிக்குள் அத்துமீறிப் புகுந்து — போலிசார் கண்முன்னலேயே — மாணவர்களைத் தாக்குவது எம். ஜி. இராமச்சந்திரனின் ‘இரசிகப் பெருமக்களான அ.தி.மு.க.வினர் அல்லவா?

தொழிலாளர்களைப் பற்றியோ—பற்ருக்குறையான— அவர்களின் வாழ்க்கைத் தேவைகளைப்பற்றியோ — தொழிற் சங்க இயக்கங்களைப் பற்றியோ ‘அ’ஞ ‘ஆ’வன்ஞ கூடத் தெரியாத —எம் ஜி. இராமச்சந்திரன், “தொழிலாளர் போராட்டங்களில் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவென்ருல், தொழிற் சங்கத் தலைவர் பதவியை வெளியார் ஒருவர் வகிப்பதேயாகும். தொழிற்சங்கத்தின் தலைமைப் பதவியைத்தொழிலாளர்களே வகித்தால், தொழிலாளர் பிரச்சினைகள் பெருமளவுக்குக் குறைந்துவிடும்...” என்ற ‘ஆலோசனை’யை அள்ளி வீசியிருக்கிருர்,

— இது ஒரு பழைய, உளுத்துப் போன வாதம். ஜார் காலத்து முதலாளிகளிலிருந்து இந்தியப் பெருமுதலாளிகள் வரை இந்த வாதத்தை ஓயாது எடுத்துரைத்து, அது எடுபடாததால் இப்போது சோர்ந்து போய்விட்டார்கள்; ஆட்டுக் குட்டிமீது ஒநாய் கருணை காட்டுவது போன்ற — ‘உங்களில் ஒருவனைத் தலைவனுக்குங்கள்’ என்று தொழிலாளர்களுக்குக் கூறும் இந்த ‘உபதேசத்தை’வழங்கும்போக்கை முதலாளிகளே நிறுத்திவிட்டார்கள்.

ஆனல் —

அந்த முதலாளிகளின் மொத்த ‘ஏஜண்டாக’இருந்து இன்று எம். ஜி. இராமச்சந்திரன் அதே ‘உபதேசம்’ புரிகிருர்!

அரசியல்வாதிகளை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். ஒரு சாரார், அரசியல் கருத்துக்களை கற்றறிந்தவர்கள்; மற்ருெரு சாரார் அக் கருத்துக்களைச் செயல்படுத்துகிறவர்கள். எம். ஜி.இராமச்சந்திரன் இவ்விரு குழுக்களில் எந்த ஒன்றிலும் இடம்பெறத்தகுதியற்றவர்.

அவரால் செய்ய முடிந்ததெல்லாம் — எதிர்க்கட்சிகள் மீது பழிபோடுவதுதான்!

தமிழால் முடியும்!

★

நான் பொறுப்பு ஏற்ற பிறகு தாய்த் தமிழுக்கு என்ன செய்யப்போகிறேன் — இது பலருடைய அடுத்த கேள்வி. இந்தச் சமயத்தில் ஒரு உதாரணத்தைச் சொல்லவேண்டும்.

இரண்டாவது உலகப்போர் நடந்து கொண்டிருந்த சமயம். அப்போது இங்கிலாந்தில் பொறியியல் பட்டப்படிப்பு படித்து முடித்திருந்தேன். யுத்த காலத்தில் கப்பலில் இடம் கிடைப்பதே அரிது. பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் ‘இந்தியா திரும்புவதால் இந்தியாவின் யுத்த முயற்சிகளில் துணைபுரிய முடியும்’ என்று மிகவும் ‘IMPRESS’ செய்தேன். அதனல், யுத்த தளவாடங்களும், சிப்பாய்களும் மட்டும் ஏற்றிச் சென்ற யுத்த கப்பலில் மிகப் பிரயாசையின் பேரில் ஒன்றிரண்டு ‘சிவிலியன்’களில் ஒருவனுக சமயம் பார்த்து நான் இலங்கையில் இறங்கிக்கொண்டு ஒரு படகில் இந்தியா வந்து சேர்ந்தேன்.

தமிழ்நாடு வந்ததும் நான் செய்த முதல் வேலை ‘கலைக்கதிர்’ என்று தமிழில் விஞ்ஞானப் பத்திரிகை ஆரம்பித்ததுதான். தமிழர்கள் விஞ்ஞானம் பற்றி என்னென்ன தெரிந்துகொள்ள வேண்டுமோ அவற்றையெல்லாம் நானும் எழுதியதோடு பிறரையும் எழுதவைத்தேன். எத்தனையோ விஞ்ஞான சொற்களுக்குத் தமிழில் எழுத்து வடிவம் கொடுத்துப் பணிபுரிந்துள்ளது ‘கலைக்கதிர்’.

இவற்றிற்கெல்லாம் தமிழில் கல்வி கற்ருல்தான் நாம் மேம்பாடு அடையவும், புதுஆராய்ச்சிகளைக் கண்டு பிடிக்கவும் முடியும் என்ற அசையாத நம்பிக்கையே காரணம். அதாவது, தாய் மொழியில்தான் கல்வி இருக்கவேண்டும் என்று அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் நான்.

—சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
ஜி. ஆர். தாமோதரன்.

நன்றி: ‘குங்குமம்’ 24—9—78

புனித ராஜ்யம்

கலைஞர் எழுதும் ‘புனிதராஜ்யம்’ நாடகம்
அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து
இடம்பெறும்

டில்லியில் நான் ஒரு அந்நியன்!

["வடக்கு — தெற்கு இடைவெளி விரிவடைந்து கொண்டே போகிறது. டில்லியில் உள்ள ஆட்சியாளர்கள் இந்தி மொழியை, நாட்டின் ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்குப் பதிலாக தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டும் கருவியாக பயன்படுத்துவதற்கே விழைகிறார்கள்" என்கிறார் "மாத்ருபூமி" மலையாள நாளிதழின் டில்லி நிருபர் வி. கே. மாதவன்குட்டி. அவர் மேலும் கூறியுள்ளதையும் படியுங்கள்.]

கால் நூற்றாண்டுக்குமுன்பு நான் டில்லி வந்தேன். தலைநகரில் தங்கியிருந்து, தகவல்களை அறிந்து கொள்வதும், நிகழ்ச்சிகளைக் கண்கூடாகக் காண்பதும், இளமை முதலே நெஞ்சில் நீங்காமல் நின்று உணர்வூட்டும் தலைவர்களை நேரில் பார்ப்பதும் எத்துணை பெறும்பேறு! இவ்வாறு தாய்நாட்டின் தலைநகருக்கு வந்ததற்காகப் பெருமிதம் கொண்டேன்.

நான் ஒரு பத்திரிகையாளனாகப் பணியாற்றியதால், இங்கு வந்த சில ஆண்டுகளுக்குள்ளேயே, பல நிகழ்ச்சிகளைக் களத்திலிருந்து கொண்டே காணும் வாய்ப்புக் கிடைத்தது ஆனால் இன்று இங்கு நான் ஓர் அந்நியனைப் போல் உணர்கிறேன்.

தென்னகத்திலிருந்து மக்கள் இன்னும் இங்கு ஏராளமாக வந்து குவிந்து கொண்டுதான் இருக்கிறார்கள்; அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால், பல்லாண்டுகளுக்கு முன்பு எத்தகைய மயக்கத்துடன் நான் இங்கு வந்தேனோ அத்தகைய மயக்கத்துடன் அவர்கள் இன்று இங்கு வரவில்லை. வேலைதேடி வளைகுடா நாடுகளுக்கோ வேறு நாடுகளுக்கோ போக வாய்ப்பில்லாத காரணத்தாலேயே அவர்கள் இங்கு வருகிறார்கள். நான் வேலை தேடிக் கொண்டிருந்போது வளைகுடா நாட்டுக்கோ அமெரிக்காவுக்கோ போக வேண்டுமென எண்ணியதில்லை; சொந்த நாட்டிலேயே, டில்லியிலேயே வேலைபெற விழைந்தேன்.

ஆனால், இன்று நாட்டில் வட்டாரத்து மக்கள் மக்கள் வேறிடங்களுக்குச் செல்லவே விரும்புகிறார்கள். அந்த இடங்களில் அதிகமாகப் பணம் சம்பாதிக்கலாமென அவர்கள் எண்ணுவது உண்மைதான். ஆனால், அது மட்டுமே காரணம் அல்ல.

வடநாட்டில் தென்னாட்டவர்கள் அந்நியர்களாகக் கருதப்படுகிறார்கள் என்ற கசப்புணர்வு இப்போது மேலோங்கியுள்ளது. "நம் கதி இப்படி இருக்கும் போது, டில்லியைவிட அதிக ஊதியம் கிடைக்கும் வளைகுடா நாடுகளுக்கு ஏன் போகக் கூடாது?' என்ற எண்ணம் வலுத்திருக்கிறது.

தென்னக மக்கள், வடநாட்டுக்கு வருவதைவிட, மேன்மேலும் அயல்நாடுகளுக்குச் செல்வதுதான் நல்லது. சொந்த நாட்டிலிருந்து வெகு தொலைவிலிருக்கும் போது, இங்குள்ள பிரிவினையுணர்வு அவர்களைத் தீண்டாது; அவர்களுடைய தேச பக்தியும் பாதுகாப்பாகவே இருக்கும்.

ஏன் அந்நியன்?

இங்கு நான் ஓர் அந்நியன் என்ற உணர்வு (நம்புங்கள்; உண்மையிலேயே இப்படித்தான் நினைக்கிறேன். இந்த உணர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது) எனக்கு ஏற்பட்டுள்ளதென்றால், அதற்குக் கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் காரணமல்ல; ஒரு கட்சி ஆட்சியிலிருந்து நீங்கி இன்னொரு ஆட்சிக்கு வந்திருப்பதும் காரணமல்ல. ஒட்டு மொத்தமாக உருவாகியுள்ள நிலைமையும்,நமது நாட்டின் வரலாற்றைப் பின்னோக்கித் தள்ளும் பயங்கரமான போக்கில் அத்தகைய நிலைமை உருவாக்கப்பட்டு வருவதும்தான் இதற்குத் தலையாய காரணம்.

பத்திரிகையாளன் என்ற முறையில், திட்டமிடும் முறை பற்றி விரிவாகச் செய்திகளை எழுதியிருக்கிறேன். தென்னகத்தில் ஒரு திட்டம் தாமதப்படுத்தப்பட்ட போதெல் தென்னகத்துக்கு ஒர வஞ்சகம் காட்டும் மாற்றாந்தாய் மனப்போக்குபற்றி நான் எழுதியுள்ளேன். எனது அந்தக் கண்டனங்களுக்கு எனது வாசகர்களிடமிருந்து நிறையக் கடிதங்கள் வந்துள்ளன. ஆனால் இந்த ஒர வஞ்சனை எல்லை கடந்து போய்விட்டது என்ற உணர்வு தோன்றி விட்டது. இப்பொழுதெல்லாம் ஒர வஞ்சகம் பற்றிப் பேசுவதில்லை. அவர்கள் ஆத்திரத்தை மௌனத்தில் புதைத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள், தாங்கள் ஒர வஞ்சனைக்கு உள்ளாக்கப்படுவதுடன் மிகத் துரித கதியில் குடியேற்ற நாட்டு நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றோம் என்ற வெறுப்புணர்ச்சி அவர்களை விரைவாக ஆட்கொண்டு வருகிறது.

இதற்கான காரணங்களைக் கண்டறியும் பொறுப்பை, அரசியல் பண்டிதர்களிடம் விட்டு விடுகிறேன். ஆனால், இந்தித் திணிப்பு மட்டுமே இதற்குக் காரணம் அல்ல என்று மாத்திரம் நான் உறுதியாகக் கூறுவேன்; இந்தியைத் திணிப்பது எனக்குத் தவறானதெனத் தோன்றுகிறது.ஆனால் சிந்து—கங்கைவாழ் இந்தி வெறியர்களோ இதுதான் சரியான நடவடிக்கை எனக் கருதுகிறார்கள். ஆங்கிலேயர் ஆண்ட போது இத்தகைய உணர்வு எதுவும் நமக்கு ஏற்படவில்லை. ஏனென்றால், அப்போது நாமனைவருமே பிரிட்டிசாருக்கு அடிமைப்பட்டிருந்தோம், அவர்களை எதிர்ப்பதிலேயே நாம் குறியாகஇருந்தோம்.இப்பொழுது ஒரு தரப்பினர் மட்டும், மற்றவர்களின் மீது ஆதிக்கம் செலுத்த முனையும்போது. எல்லாமே மாறித் தோன்றுகிறது.

"தென்னக அடிமைகளுக்குச் சாட்டையடி"

இந்தித் திணிப்பு முயற்சியை எதிர்ப்பதற்கு அடையாளமாகத் தென்னாட்டுஇந்தி எதிர்ப்பாளர்கள் அரசியலமைப்பின் நகல்களை எரித்த போது, இங்கு பெரும் அட்டூழியமே நடந்தது. பிரிட்டிஷ் ஆட்சியில் "சட்டத்தை மீறிய' தேசியவாதிகள் எவ்விதம் மூர்க்கத்தனமாக அடக்கியொடுக்கப்பட்டார்களோ அதே அளவு கொடூரத்துடன் இந்தி எதிர்ப்பாளர்களும் அடக்கப்பட்டார்கள். அவர்களுடைய போராட்டம் "தேசவிரோதச் செயல்" என வருணிக்கப்பட்டது.

இதற்கு ஏறத்தாழப் பத்தாண்டுகளுக்குப் பிறகு, வெறும் காகிதம் மட்டும் எரிக்கப்படவில்லை;அரசியலமைப்பு முழுவதுமே அடியோடு அவமதிக்கப்பட்டு எள்ளிநகையாடப்பட்டது.

கட்டுண்டு கிடந்த நாடாளுமன்றமோ இக்காட்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டு வாளாவிருந்தது. இந்தக் குற்றத்தைத் தீவிரவாதம்—திசை தடுமாறிய தேசியவாதம் — என்றெல்லாம் படிப்பாளிகள் வருணித்தார்கள். ஒரே போராட்டத்திற்கு இருவேறு அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டன. ஒரே குற்றத்தை ஆரியர்கள் செய்தால், அது ஏதோ திசைமாறாட்டம்;அதே குற்றத்தைத் தென்னவர்கள் செய்தால், அவர்களைத் தென்னாட்டு அடிமைகள் எனக் கூறிச் சவுக்கால் அடிப்பது.

அவசரநிலை தென்னாட்டை எட்டவில்லை; பத்திரிகைத் தணிக்கையும்,மற்றச்செய்தித் தொடர்பு வசதிக்குறைவும், இந்தி பேசும் பகுதிகளில் மட்டுமே பெரும்பாலும் நடந்த கொடுங்கோலாட்சியின்கொடூரங்கள் தென்னகத்தைஎட்டாமல் செய்துவிட்டன. அவசரநிலை நிருவாகத்தினரும்,வழக்கமான குறுகிய மனப்போக்குடன், வடநாட்டை வசப்படுத்தி வழிக்குக்கொணர்ந்துவிட்டால் தென்னாடும் தானாகவே வழிக்கு வந்துவிடும் என மனப்போக்குடன் நடந்து கொண்டார்கள். இத்தகையதொரு தாறுமாறான நிலையில்தான், தென்னாட்டு மக்கள் தங்களது உள்ளூர்த் தலைவர்களுக்கே வாக்களித்தார்கள். தென்னக மக்கள் தங்கள் தலைவர்களைப் புறக்கணித்துவிட்டு, ஜனதாவுக்கு வாக்களிப்பதற்குத் தென்னாட்டில் ஜனதா ஒரு வலுவான கட்சியாக விளங்கவில்லை என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். பிரதான நீரோட்டத்துடன் தென்னாடு சேரவில்லை என்ற வடநாட்டவர் கருத்தை வலுப்படுத்தும் வகையில் இந்த வாக்களிப்பு அமைந்திருந்தது.

நெருக்கடி நிலையின்போது

[தொடர்ச்சி 10-ம் பக்கம்)

வானொலியின் வக்ரபுத்தி!

அனைத்திந்திய வானொலி, தொலைக்காட்சி (டெலிவிஷன்) நிலையங்கள் அன்றும் இன்றும் ஆளுங் கட்சியினரின் 'ஊது குழல்களாகவே' செயல்பட்டு வருகின்றன இனியும் அவை; அவ்வாறே செயல்படும்... என்னதான் எதிர்ப்புக்குரல் கொடுத்து, கண்டனம் தெரிவித்தாலும் தங்கள் போக்கை அவை மாற்றிக்கொள்ளப் போவதில்லை.

வேண்டியவர் எனவும் வேண்டாதவர் எனவும் பேதம் பாராட்டுவதையும், செய்திகளை 'விஷமத்தனமாக' திரித்து வெளியிடுவதையும் அவை வாடிக்கையாகக் கொண்டுள்ளன.

தங்களுக்கு வேண்டியவர்கள் என்றால் அவர்களை 'வெளிச்சம்' போட்டுக் காட்டுவதையும், வேண்டாதவர்கள் என்றால் அவர்களை 'இருட்டடிப்புச் செய்வதையும் ஒரு 'கடமை'யாகவே கொண்டுவிட்டன அவை. எடுத்துக்காட்டாக —

அண்மையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு டில்லியும், அதன் சுற்றுப்புறங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டன. நிவாரணப் பணிகளில் அனைத்துக் கட்சிகளும் — கருத்து வேறுபாடுகளைமறந்து — முனைந்து செயல்பட்டு வருகின்றன

ஆனால் —

வானொலியும், தொலைக்காட்சியும், நிவாரணப் பணிகளில் முழுக்க முழுக்க ஆர். எஸ். எஸ். (ராஷ்டிரியசுயம் சேவாசங்கம்) மட்டுமேஈடுபடுவது போன்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்தி வருகின்றன. பிற கட்சிகளின் பணிகளைப் புறக்கணித்துவிட்டு ஆர். எஸ். எஸின் பணிகளை மட்டுமே பேசியும், படம்பிடித்து காட்டியும் வருகின்றன.

அவைகளின் இந்த ஒருதலைப்பட்சமான போக்கை எதிர்த்துப் பிறகட்சிக்காரர்கள் ஆர்ப்பாட்டங்கள் செய்து கைதாகியுள்ளனர்.

'வானொலி, தொலைக்காட்சி நிலையங்களின் போக்கை எதிர்த்துப் போராட வேண்டும்' என்று கலைஞர் முழங்கும்போது முகம் சுளிப்பவர்கள் —

இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்களோ?

முப்பெரும் தத்துவ மோதிரங்கள்!

மேற்படி மோதிரங்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. பல் ஆண்டுகள் உழைக்கக் கூடிய ஒரு மோதிரம் விலை ரூ. 15. தபால் செலவு தனி. உங்களுக்கு தேவையான மோதிரத்தைக் குறிப்பிட்டு உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து, ரூ. 3 அட்வான்சுடன் அனுப்பினால், மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் மோதிரத்தை V. P. P மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு. (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

"போட்டோ வீனஸ்" 104, C. N. K. ரோட், சென்னை-600 005.

‘இந்தி’யா?

பாபு ஜெகஜீவன்ராம் சென்னை வந்திருந்தபோது இந்தி எதிர்ப்பாளர் பற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் ‘தம் சொந்த நலனுக்கு’ ‘இந்தி எதிர்ப்பை’ப் பயன்படுத்துகிறார்களாம்!

தமிழகத்தின் சில ‘குறிப்பிட்ட அரசியல் தலைவர்கள்’ தாங்கள் இடர்ப்பாட்டில் சிக்கிக் கொள்ளும்போது அதிலிருந்து சூழ்ச்சியான முறையில் வெளிவர இந்தியைப் பயன்படுத்திக் கொள்கிறார்களாம்! ‘இது துரதிர்ஷ்டவசமானது.’ இந்தி எதிர்ப்பை, அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்த வேண்டாம்!’’ என்றும் பாபு ஜெகஜீவன்ராம், சத்திய மூர்த்தி பவனில் ஜனதா கட்சித் தொண்டர்களிடையே பேசியிருக்கிறார்.

“தமிழ் இந்தியாவின் ‘தொடர்புமொழியாகஇருக்க வேண்டும்’’ என்று கேட்டுக் கொண்டால்கூட என்னாலே விளங்கிக்கொள்ள முடிகிறது! ஆனால் ஆங்கிலம் ஒருபோதும் இந்தியாவின்தொடர்புமொழியாக இருக்க முடியாது’’ என்றும்,

“இந்தியை எங்கள் மீது திணிக்கக்கூடாதுஎன்றுசொல்கிறவர்கள், ஆங்கிலத்தைமற்றவர்கள்மேல் திணிக்கக்கூடாது என்றும் பாபு ஜெகஜீவன்ராம் முழங்கியிருக்கிறார்.

இந்தி எதிர்ப்பு என்பது இன்றைக்கு நேற்றைக்கு எழுந்துவிட்ட திடீர் உணர்வல்ல! தமிழகத்திலே மட்டுமே காணப்படுகின்ற எழுச்சியல்ல

இந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாகவும், அலுவலக மொழியாகவும் ஆன வரலாற்றைஎண்ணிப்பார்த்தால் உண்மை புலனாகும்! மற்றவர்களுக்குப் புலனாகாமல்போனாலும், இந்தியாவில் அமைச்சரவை தொடங்கிய நாள் தொட்டு இன்று வரைக்கும் ஏதாவது ஒரு அமைச்சராக இருந்துகொண்டே வருகின்ற பாபு ஜெகஜீவன் அவர்கட்குக் கட்டாயம் புரியும் என்ற நம்பிக்கையில்,

1918—இல் அண்ணல் காந்தியடிகளுக்குக் கவிஞர் இரவீந்திரநாத தாகூர்எழுதிய கடிதத்திலிருந்து சில வரிகளை நினைவூட்ட விரும்புகிறோம்.

இந்திப் பிரச்சினையில் தனக்குஅறிவுரைவழங்கியுதவுமாறு அண்ணல் காந்தியடிகள் இரவீந்திரநாத தாகூருக்கு எழுதினார். காந்தியடிகளுக்குக் கவிஞர் இரவீந்திரநாததாகூர் எழுதிய வரிகள், தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் மீது பழி சுமத்துகிற ஜெகஜீவன்போன்றவர்களுக்கு எவ்வளவுஅழகான பதிலாக அமைகின்றன என்பதை எண்ணி வியக்கிறோம்.

“முதலில் சென்னை (தமிழக) மக்களுக்கு இந்தி ஒரு அந்நிய மொழியாகவே இருக்கும்.

புலவர்
அண்ணாமலை எம்.ஏ.

இரண்டாவதாக நம் அரசியல்வாதிகள் - (தமிழக அரசியல்வாதிகள் மட்டுமல்லர்) இந்தியில் தம் கருத்துக்களைச் சொல்ல—மிகமிக இடர்ப்படுவர். அதுஅவர்கள்பிழையல்ல. அவர்களுடைய தவறல்லாததற்காக அவர்கள் துன்புற வேண்டியிருக்கும்!’’ — என்று கவிஞர் தாகூர் காந்தியடிகளுக்கு எழுதினார்.

ஆக, இந்தியை ஆட்சி மொழியாக்குவது என்ற எண்ணம் எப்போது எழுந்ததோ அப்போதே சென்னைமக்கள்—தமிழக மக்கள் இடர்ப்படுவர்—அவர்களிடமிருந்து எதிர்ப்பு

இந்தியாவா?

வரும் என்பதை நல்லறிவுடையோர் — கவிஞர் தாகூரைப் போன்றோர் உணர்ந்தே இருந்தார்கள்.

தமிழகம் மட்டுமல்ல, இந்திக்கு வட நாட்டிலேயே எதிர்ப்பு இருந்து இருக்கிறது என்பதை ஜெகஜீவன்ராமுக்கு நினைவூட்டுவது நம் கடமையாகும்.

“குறிப்பிட்ட சில அரசியல் தலைவர்கள் தாம்’’ இன்றைய நிலையில் தமிழகத்திலே இந்தியை எதிர்க்கிறார்கள் என்கிற உண்மையை பாபு ஜெகஜீவன்ராம் உணர்ந்துகொண்டிருப்பதைக் கண்டு நாம் மகிழ்கிறோம். எல்லா அரசியல் தலைவர்களும்’ உண்மையில் இந்தியை எதிர்க்கவில்லை என்று டாக்டர் கலைஞர் கூறிடும்போது குதிக்கும் சிலர், ஜெகஜீவன்ராம் இந்தி எதிர்ப்புக் குறித்து, “குறிப்பிட்ட சில அரசியல் தலைவர்கள்’’ பற்றியே தன் கவலையைத் தெரிவித்திருக்கிறார் என்பதை அறிந்தும் ஏன் பேசாதிருக்கின்றனர்?

இந்திக்காக வாதிடுவோர் இதுவரையிலும் வெளியிடாத ஒரு அபாண்டமான குற்றச்சாட்டை நெடிய அனுபவமிக்க ஜெகஜீவன்ராம் வெளியிட்டிருப்பதைக் காண உள்ளபடியே அதிர்ச்சியாக இருக்கிறது.

அவர், “இந்தியைத் தம் மீது திணிக்கக் கூடாது என்று சொல்கிறவர்கள்—அதாவது இந்தி பேசாத மக்கள், ஆங்கிலத்தை மற்றவர் மீது அதாவது இந்திக்காரர்கள் மீது திணிக்க முற்படக் கூடாது,’’ என்கிறார்.

இந்திகாரர்கள் மீது நாமா ஆங்கிலத்தைத் திணித்தோம்?

ஆங்கிலம் இந்தியாவிலே மட்டுமல்ல—உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளில் பரவிக்கிடக்கின்ற மொழி. இந்திக்காக வாதிடுகிற இந்திக்காரர்களே கூட உலகத் தொடர்புக்காக ஆங்கிலம் கட்டாயம் வேண்டும் என்று வலியுறுத்தாமல் இருந்ததில்லை. மும்மொழித் திட்டமே ஆங்கிலம் வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே எழுந்ததுதானே?

உலகத்தோடு தொடர்பு கொள்வதற்காகப் பயிலப்படுகிற ஆங்கிலத்தின் துணையால், இந்திபேசுகிற உங்களோடும் தொடர்பு கொள்ளுகிறோம்—எதற்காக உலகத் தொடர்புக்கு ஒரு மொழி, அப்புறம் உள்நாட்டுத் தொடர்புக்கு ஒரு மொழி என்று எங்களை வதைக்கப் பார்க்கிறீர்கள்? பூனை போவதற்கு ஒரு வழி அதன் குட்டி போவதற்கு இன்னொரு வழி என்று இரண்டு வேண்டுமா?— என டாக்டர்கலைஞர் கேட்கிறார்.

இந்தியா ஒரு நாடு. அதற்கென்று ஒரு மொழி வேண்டும். ஒரு மொழி இருந்தால்தான் இந்தியா ஒற்றுமைப்படும் என்கிறார்கள்.

ஒரு மொழி இருந்துவிடுவதாலேயே ஒற்றுமைவிளைந்துவிடுமா?

இலத்தீன் அமெரிக்க நாடுகள்—தென் அமெரிக்க நாடுகள் பிரேசிலைத்தவிர—கியூபா உள்பட—எல்லா நாடுகளும் அங்கேஸ்பானிஷ்மொழியைத்தான் பேசுகின்றன. தென் அமெரிக்க நாடுகள் இலத்தீன் அமெரிக்க நாடுகள் யாவும் ஸ்பானிஷ்மொழி ஒன்றையே பேசுகின்றன என்பது மட்டுமல்ல ஏறக்குறைய எல்லா நாட்டு மக்களுக்கும் மதம், பண்பாடு, இனம் இன்னும் பல்வேறு ஒற்றுமைகளும் உண்டு. எனினும் அவைகள் வெவ்வேறு நாடுகளே; வெவ்வேறு நாடுகள் என்பதோடு மட்டுமல்ல ஒன்றுக்கொன்று நல்லுறவோடும் நட்புறவோடும் வாழுகிற நாடுகளும் அல்ல!

அரபு நாடுகள் அனைத்திலும் ஒரு மொழிதான் பேசப்படுகிறது. அரபுநாடுகள்பதின்மூன்று இருக்கின்றன! இவை அனைத்திலும் ஒரே மொழிதான் ஒரே மதம்தான்! ஒரே இனம்தான்! ஒரே பண்பாடு

(5ம் பக்கம் பார்க்க)

பா. ரா.வின் மந்தபுத்தி மதுலிமாயி தரும் ‘நற்சான்று!’

கேள்வி; தி. மு. க. வுடன் கொண்ட உறவைக் காப்பாற்றி வளர்க்க ஏன் உங்களால் இயலவில்லை? அல்லது அ. தி. மு. க.வுடன் ஏன் ஒரு புது உறவு ஏற்படுத்திக்கொள்ளவில்லை?

பதில்: தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தேர்தலின் போது தி. மு. க. வுடன் நாங்கள்(ஜனதா) கொண்ட உறவை முறித்துக்கொண்டுவிட்டோம். அ. தி. மு. க.வுடன் புது உறவு எதுவும் கொள்ள மறுத்துவிட்டோம். திரு. ப. ராமச்சந்திரனுடைய மழுங்கல் தனமான மந்த புத்தி ஜனதா கட்சிக்குத் தமிழ்நாட்டில் அவமானகரமான தோல்வியைக் கொண்டு வந்தது.

1977 ஏப்ரலில் நான் மத்திய எரிபொருள் அமைச்சர் பா. ராமச்சந்திரனுடன் சென்னைக்குப் போயிருந்தேன். அப்போது ‘ நாம் காமராஜ் சிலையோடு மட்டுமின்றி பெரியார்இராமசாமி, அறிஞர் அண்ணா ஆகியோர் சிலைகளுக்கும் மாலைகள் அணிவிக்க வேண்டும்’ என்றும் ‘அதுதான் தமிழக மக்கள் மனதில் நமக்கு ஒரு நல்லிரக்க உணர்வை ஏற்படுத்தும்’ என்றும் சொன்னேன். ஆனால் என் சொல்லுக்குத் திரு. பா. ராமச்சந்திரன் செவி சாய்க்க மறுத்துவிட்டார். ‘‘அப்படிச் செய்தால் என்னுடைய தொண்டர்கள் சினம் அடைவார்கள்’’ என்றார்.

இப்படிப்பட்ட குறுகலான புத்தியுடன் இருந்தால் தமிழகத்தில் ஜனதா வளர்ச்சியடைய முடியுமா?

‘சண்டே’ ஆங்கில வார இதழுக்கு
மதுலிமாயி அளித்த பேட்டி
(24—9—78 இதழ்)

அண்ணாவின் திருவுரு!

(நங்கை மு. மதிவாணன்)

ஆண்டவனை வணங்குகிறேன்
கற்பனையி லில்லாத
ஆண்டவனை வணங்குகிறேன்
அருந்தமிழர் தமிழரசை
ஆண்டவனை வணங்குகிறேன்!
நீடுதுயில் நீக்கவந்த
அண்ணாவை வணங்குகிறேன்!
அறிவொளியை வணங்குகிறேன்!!
அண்ணாவை வணங்குகிறேன்

அந்நாவை வணங்குகிறேன்!
அறிவென்றும் கடலினிலே
அலையெழுப்பும் அவருடைய
பண்ணாவை வணங்குகிறேன்!
பண் நாவை வணங்குகிறேன்!
பகுத்தறிவின் நரம்பினமாம்
அண்ணாவை வணங்குகிறேன்!
மேலுதட்டில் வெண்மயிர்கள்
மருவுகின்ற காட்சியெலாம்
மலர்காலைச் சூரியனாய்

மேவுதுபார் காட்சிகளாய்!
மேலுதடு மலையென்றால்
மென்மயிர்கள் கதிரென்க!
முல்லைப்பல் ஒளிச் சிதறல்
முகிழ்கின்ற ஒளியென்க!
நாவென்னும் மலைமுகட்டில்
நலிந்திருக்கும் எச்சிலெல்லாம்
நகர்ந்தோடும் தமிழருவி
அவன்சிந்தும் எச்சிலெல்லாம்
மண்ணென்னும் மக்களெலாம்
விரும்புகின்ற சொல்லருவி!
மதுவிலக்கை விரும்பாத
தேனீ! ஆம், தமிழ்த்தேனீ!

★தூங்கும் புலியை இடறாதீர்!★

இந்தியாவில் ஏறத்தாழ 1400 மொழிகள் வழக்கத்தில் உள்ளன. இவற்றில் பதினைன்கு மொழிகளைத்தான் தேசிய மொழிகளாக அரசியல்சட்டம் ஏற்றுக் கொண்டுள்ளது. அவற்றில் இந்தி மொழி மட்டுமே ஆட்சி மொழியென மத்திய அரசு கூறுகிறது.

ஆட்சி மொழியாக 14 மொழிகளும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் அத்துடன். அந்தச் சட்டம் வரும்வரை இந்த 14 மொழிகளுக்கும் பொதுமொழியாக ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

ஓர் அந்நிய மொழியான ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகஏற்றுக்கொள்ள துணிந்த போது ஏன் இந்திய மொழியான இந்தியை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கேட்பவர்கள் உள்ளனர். இந்தி ஆட்சி மொழியென்றால் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவன் கட்டாயம் இந்தியைப் படிக்கவேண்டும். இல்லையென்றால் மத்திய அரசு உத்தியோகங்களுக்கு அவன் பயன்படமாட்டான். அகில உலகத் தொடர்பிற்கும், அறிவியல் படிப்பிற்கும் அவன் ஆங்கிலம் படித்திருக்க வேண்டியது அத்தியாவசியமாகிறது. ஆகவே இந்தியைத்தாய் மொழியாகக் கொள்ளாதவன் தன்னுடைய தாய்மொழியைப் படிப்பதோடு இந்த இரண்டு வேற்று மொழிகளையும் படித்தாக வேண்டும். ஆனால் இந்தியைத் தாய் மொழியாகக்கொண்டவன் தன் தாய் மொழியோடு ஆங்கிலம் மட்டும் படித்தால் போதும். ஆகவே அவன் இரு மொழிகள்படித்தால்போதும். ஒரு மொழியை அதிகமாக படிக்கின்ற சுமை இல்லை. இதைத்தவிரஇந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவன் இந்தியே தேர்வு மொழியாகவும் மத்திய அரசினால் கொள்ளப்படுவதினால் இந்தியைத்தாய்மொழியாகக்கொள்ளாதவர்களைவிட அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெறுவது எளிதாகிறது. இந்தியைத்தாய் மொழியாக கொள்ளாத இளைஞர்கள் மட்டும்சிரமப்படுகின்றனர்.

டி. ஆர். பாலு

ஆகவே வடவர்கள் மீது இந்தி பேசாத மாநிலத்து மக்களுக்கு இயற்கையாகவே ஒரு வெறுப்புணர்ச்சி ஏற்பட ஏதுவாகிறது.

இந்திதான் ஆட்சி மொழி என்று அரசியல் சட்டமாக்கியவர்கள் கூறுகின்ற காரணங்கள் யாவை? இந்தியைத்தான் இந்த நாட்டில் உள்ளவர்கள் அதிகம் பேசுகின்றனர்; ஏறத்தாழ 47 சதவிகிதம் பேர்கள் பேசுகிறார்கள். ஆகவே இந்திதான் ஆட்சி மொழி என்கின்றனர். இலக்கண, இலக்கியங்கள் அற்ற ஒரு மொழியினை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள எல்லா வளமும் பெற்ற தமிழ் மொழியைப் பேசுகின்ற தமிழர்கள் எப்படி ஒப்புக்கொள்வர்? அதிகம் பேர் பேசுகின்ற மொழி ஆட்சி மொழியென்றால், இந்த நாட்டில் அதிகம் உயிர் வாழுகின்ற காக்கை இனத்தைத் தேசியப் பறவை என்று சொல்லாமல் குறைவாக உள்ள மயிலை ஏன் தேசியப் பறவை என அழைக்க வேண்டும்? அதிகம் பேசப்படுகின்ற இந்தி மொழியில்பாடப்படாது குறைந்த மக்கள் தொகை மட்டுமே பேசுகின்ற வங்க மொழி "ஜன கணமன" பாடலை எப்படி தேசியப் பாடலாக ஏற்றுக்கொண்டனர்?

தேசம் ஒற்றுமை பெற ஒரு மொழிதான் ஆட்சி செய்ய வேண்டும் என்பது சொத்தை வாதம். ஏன் 14 மொழிகளும் ஆட்சி பீடத்தில் அமர முடியாதா? அப்படிப்பல்வேறு மொழிகள் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு முறையாக ஆட்சி நடத்தும் நாடுகள் உலகில் வேறு எங்கும் இல்லையா?

இன்றைக்குக் கலாச்சார அடிப்படையை மறந்து ஒரு மொழியை வைத்து தேச ஒற்றுமைக்கு வழிதேட முனைவோர் சற்று வரலாற்றுத் தடங்களைத் திருப்பிப் பார்ப்பது நன்று. மகமது அலி ஜின்னா பாகிஸ்தான் பிரிவினை கோருகிறார். மத அடிப்படையில், கலாச்சார அடிப்படையில்பிரிவினை கோருகின்றார். காந்தியடிகள் பாகிஸ்தான் பிரிந்து செல்லக்கூடாது என்றும் அப்படிப்பிரிந்துசெல்லாமல்இருக்க ஒரு மொழி தேவை. அந்த மொழி பாகிஸ்தானியர்கள் பேசுகின்றஉருது, அராபிஆகிய மொழிகளை இந்தியாவில் பேசப்படும் இந்தியோடு இணைத்து அதை ஹிந்துஸ்தானி மொழி என்று சொல்லி, அந்த இந்துஸ்தானி மொழி நாட்டின் பொது மொழி என்று அறிவித்தார். ஆனால் ஜின்னா, அதற்கும் ஒத்துக்கொள்ளாமல் இறுதியில் பிரிவினையை கலாச்சார அடிப்படையில் பெற்றுவிட்டார்.

ஆகவே பல்வேறு மொழி பேசுகின்ற பல்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட இந்தியாவில் ஒரு மொழி ஆட்சி என்றைக்கும் ஒத்துவராத ஒன்று, பல மொழிகள் பேசும் மக்களை ஒரு தனிப்பட்ட மொழியினால் ஒன்றிணைக்க முற்படுவது, பல மதங்களைப் பின்பற்றும் மக்களை ஒரு தனி மதத்தைப் பின்பற்ற வற்புறுத்தி அதனால் விளைகின்ற விபரீதங்களை அனுபவிக்க முயலுகிறார்கள் என்றுதான் கொள்ளவேண்டும்.

அண்மையில் சென்னையிலிருந்து புறப்பட்ட கிராண்ட்டிரங்க் எக்ஸ்பிரஸ் ஆக்ராவிற்கும் போபாலுக்கும் இடையே சென்று கொண்டிருந்தபோது கொள்ளைக்காரர்கள் தமிழர்களின் உடமைகளை பறித்துச் சென்றனர். இதை போபால் போலீஸ் நிலையத்தில் முறையிடச் சென்றவர்களை இந்தியில் எழுதிகொடுத்தால்தான்முறையிடு பரிசீலிக்கப்படும் என்று போலீசார்கள்திருப்பிஅனுப்பிவிட்டிருக்கிறார்கள், ஆகஒருதமிழன் பாதுகாப்புப்பெற இந்தியின் துணை தேவைப்படுகிறது. அரசியல் சட்டப்பிரிவு 14ன் படி சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்கிறார்கள், ஆனால் இந்தி படித்தவனுக்கு ஒரு நீதி அந்த மொழி தெரியாதவனுக்கு ஒரு நீதி என நடைமுறைப் பாடம் கற்பிக்கிறது. இது நியாயந்தானா?

அடுத்து மன்னார்குடியில் சப்மெஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு வழக்கு நடைபெற்றது.

மத்திய அரசு ஊழியர் தொடுத்த வழக்கு அது. தன்னைத் திரும்பவும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசின் மீது தொடர்ந்த வழக்கில் ஊழியர் வெற்றிபெறுகிறார். தீர்ப்பு தமிழில் இருந்த காரணத்தால் மேலதிகாரிகள் அந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்ததோடு அந்த ஊழியரை இன்றுவரை வேலைக்குத் திரும்ப எடுத்துக் கொள்ளவில்லை. தேசியமொழிகளில் ஒன்றான தமிழுக்கு நேர்ந்த கதி இது.

இத்தகு தொடர் நிகழ்ச்சிகள் தூங்குகின்ற தமிழ்ப் புலிகளை இடறுகின்ற செயலே தவிர வேறல்ல; மத்திய அரசினர் நம்மை இரண்டாந்தார மக்களாக எண்ணி வருகின்றனர்! இதற்கு ஒருமுடிவு கட்டியாக வேண்டும்.

'இந்தியா? இந்தியாவா?...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தான்! ஆனாலும் அரபுநாடுகள் பதினைன்று

இவைகளெல்லாம் பார்க்கிறபோது பொது மொழி என்று ஒன்று இருப்பதாலேயே நாட்டில் ஒற்றுமை விளைந்துவிடும் என்கிற வாதத்தை எப்படி நம்புவது?

பதினைன்கு மொழிகளைத் தேசிய மொழிகள் என்று பெருமைப்படுத்திவிட்டு, ஒரே ஒரு மொழியை மட்டும் அலுவல் மொழி என்றும் தொடர்பு மொழி என்றும் சொன்னால் என்ன நியாயம்?

ஆங்கிலம் அந்நிய மொழி அது அகற்றப்படவேண்டும்! வாதத்துக்காக அதைக்கூட சரி என்போம், அதன் இடத்திலே வைக்கப்படுகிற மொழி எதுவானாலும்—அது பேசப்படாத பகுதியிலே வாழும் எந்த இந்தியனுக்கும் அந்த மொழி அந்நிய மொழியாகும் அல்லவா; வேற்று நாட்டிலிருந்து வந்தால்தான் அந்நிய மொழியா?

நேருவே படிப்படியாக ஆங்கிலத்தை அகற்றுவோம் என்று பேசினார். அதன் பிறகு தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் தமிழகத்திலே அணிவகுத்துக் காட்டிய இந்தி எதிர்ப்புப் படையின் வேகத்தைக் கண்டு,

"இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரை ஆங்கிலம் நீடிக்கும்" என்றார்.

அவருடைய உறுதிமொழியிலேகூட நம்பிக்கை வைக்காமல்தான், நேருவின் உறுதிமொழி, அரசியல் சட்டத்தில் இடம்பெற வேண்டுமென்று தமிழகம், டாக்டர் கலைஞர் தலைமையிலேயே வற்புறுத்தி வருகிறது

தமிழகத்துக்கு வந்துஆங்கிலத்தை விரட்டுங்கள் என்று பேச ஜெகஜீவன்கள் வருவார்கள். ஆனால் அவர்களுக்கு நாம் மிகுந்த பணிவோடு சொல்லிக்கொள்வோம் அந்த வேண்டுகோள் எது? இதுதான்.

'இந்தியா என்று ஒருமகத்தான நாட்டை உருவாக்கியது ஆங்கிலம்தான்! ஆங்கிலம் ஒன்றுதான் சரித்திரத்தில் எந்தக் காலத்திலும் இல்லாத எல்லைக்கோடுகளோடு இப்போதிருக்கிற இந்தியாவை ஏற்படுத்தியது! ஆங்கிலத்தை துரத்துங்கள் அழியுங்கள் என்ற கோஷத்தின் மூலம் இந்தியா ஒன்று அதனைக்காக்க வேண்டும் என்று மனதார விரும்புகிற இந்தி பேசாத அனைத்து மக்களின் உணர்வுகளைக் கெடுத்து விடாதீர்கள்!"

'ஏக்கம்'!

(தென்னகன்)

எங்கோஓர் மூலையிலே
ஏக்கம் பிறக்கிறது:
அடிமனத்தில் எங்கோ
அவலம் தெரிகிறது;

அண்ணாவும் இல்லை; விழா
அவர் தலைமை பெறவில்லை
பெரியாரிடம் கற்ற
பெருமை மிகக்கொண்ட
ஆநர்க் கலைஞரவர்
ஆட்சி முரசொலிக்கும்
அரசேதான் இன்றில்லையே
அப்போது நம்பெரியார்
நூற்றாண்டு விழா நாள்
நோக்கி வரவில்லையே

காலமெலாம் தந்தையினைக்
கைக்குழந்தை போலேதான்
காத்திருந்த அன்னையார்
காணும் நிலையினிலே
இந்த விழாவும்
இனிக்க வரவில்லையே'

அய்யாவும் வீற்றிருக்க;
அம்மா அருகிருக்க
நாயும்தன் வால்குழைத்து
நன்றி உணர்வோடு
காதுகளை ஆட்டாமல்
கண்டு படுத்திருக்க
இந்த விழாவும்
இனிக்க வரவில்லையே!

தந்தையே எங்கள்
தலைகோடி தந்தேனும்
உங்கள் நெறியை
உயிராகக் காத்திடுவோம்!
என்றே அவர்முன்னே
ஏற்கும் உறுதிதர
இந்த விழாவும்
இனிக்க வரவில்லையே'
எங்கோஓர் மூலையிலே
ஏக்கம் பிறக்கிறது!
அடிமனத்தில் எங்கோ
அவலம் தெரிகிறது!

[சென்னை பெரியார் திடலில்நடைபெற்ற ஐயா நூற்றாண்டு விழாவில் பாடியது]

சந்தனக் கிண்ணம்

கலைஞர் கருணாநிதி

தலைவர் பேச ஆரம்பித்தார். புதுநிலவு போன்ற மணமகளையும், பூரிப்பு வழிய அமர்ந்திருக்கும் மணமகனையும் பாராட்டினார். பழமையின் அடிச்சுவடுகள் மறையாமலிருக்கிற அந்தப் பட்டிக்காட்டிலே பகுத்தறிவுச் சுடர் கொளுத்தி வைத்த அந்த இளைஞனை இதயபூர்வமாக வாழ்த்தி மகிழ்ந்தார், வாழ்வுக்கு ஒளிதரப்போகும் தன் காதலனைத் தலைவர் பாராட்ட, அதுகேட்டுவெட்கத்தோடு அமர்ந்திருக்கும் புதுப் பெண்ணின் நெஞ்சம் இன்ப ஓடையாயிற்று.

புரோகிதமணம் ஏன் கூடாது — புரட்சித் திருமணம் எப்படி வளர்ந்தது என்பதற்கான விளக்கங்களை வாரி வாரித் தலைவர் இறைத்தார். வந்திருந்த வண்டினங்கள் அந்தத் தீந்தமிழ்த் தேனை உண்டு மகிழ்ந்தன,

பொருந்திய மணம் என்னுல்என்ன? திருமணத்திற்குத் தேவையான — தகுதியான வயது என்ன என்பது பற்றியும் விளக்கம் தந்தார்.

பழமையும் புதுமையும் மோதிக்கொள்ளக் கூடாது என்று கேலி செய்தார், ஆதாரங்கள் காட்டி திராவிடம் என்று ஓர் இனம்உண்டு, "திராவிடம்" என்று இழித்துரைப்பர் தீயோர்,

'தீயோருக்குத் தீராவிடம் தான்' என்று சான்றுகளை வழங்கினார்,

"திராவிட உட்கல வங்க" என்ற தாகூரின் பாட்டிலே— "தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நற்றிரு நாடும்" என்ற மனோன்மணியம் ஆசிரியர் ஏட்டிலே— "திராவிடர் வரலாறு" என்ற சரித்திரப் புத்தகத்திலே — "மாமல்லன் காலத்தில் திராவிட பாணியில் செதுக்கப்பட்டது" என்ற மகாபலிபுரத்துச் சிற்பக் கல்வெட்டிலே — "திராவிட வித்யா பூஷணம்" என்று சாமிநாத ஐயரவர்களுக்குத் தரப்பட்ட பட்டத்திலே "திராவிட" என்கின்ற தேன்மலர் மணம் வீசுவதைத் தென்றல் நடையில் எடுத்துச் சொன்னார்.

அத்தகைய திராவிடத்தைக் காப்பாற்ற மணமக்கள் முன்வர வேண்டுமென்பதை 'காதலிலே கவிதையிலே களம்போகும் பேச்சு —கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!' என்ற கவிதை வரிகளால் குறிப்பிட்டார்.

பின்னர் வாழ்வுப் பாதையில் குறுக்கிடும் வளைவுகளை எடுத்துச்சொல்லி எதையும் தாங்கிடும் துணிவு வேண்டும் என்று தைரியமூட்டினார். குடும்பம் என்பது மணல்வீடு கட்டிமரப்பொம்மைவைத்து மழலை விளையாட்டு விளையாடிய கொழுந்துப் பருவ நிகழ்ச்சியல்ல எனக்காட்டி, "வாழ்க்கை வானில் பறக்கச் சிறகடிக்கும் வெண்புறுக்கள்! வாழ்க நீவிர் வளமெல்லாம் பெற்று!" என வாழ்த்தினார், பலமுறை. புறநானூற்றில் உலவிடும் தாய்மார்கள் பலர் தேவை என்று முழங்கினார் சுருக்கமாகவும் சுவையாகவும் புறநானூறு கூறுகிற ஓர் அழகான கவிதைக்கு மெருகேற்ற எளிய நடையிலே கீதமிசைத்துத் தந்தார். அந்தக் கீதமே ஒரு கதையாகஇருந்தது.

குடிசைதான் ஒருபுறத்தில்; கூரிய வேல் வாள்
வரிசையாய் அமைந்திருக்கும்,
வையத்தைப் பிடிப்பதற்கும்,
வெம்பகை முடிப்பதற்கும்,
வடித்து வைத்த படைக்கலம்போல் மின்னும் மிளிரும்
புலியின் குகையினிலே அழகில்லை; புதுமையல்ல!
கிலியும் மெய்சிலிர்ப்பும் கீழிறங்கும் தன்மையும்
தலைகாட்டா மானத்தின் உறைவிடம்.
மறவன் மாளிகை!
இல்லத்து வாயிலிலே கிண்ணத்துச் சோற்றோடு
வெல்லத்தைச் சிறிது கலந்து வயிற்றுக்குள் வழியனுப்ப
பொக்கை வாய்தனைத் திறந்து
பிடியன்னம் எடுத்துப் போட்டாள்
பெருநரைக் கிழவி யொருத்தி;
ஓடிவந்தான் ஒரு வீரன், 'ஒரு சேதிபாட்டி'—என்றான்
"ஆடி வந்த சிறுமிபோல் பெருமூச்சு வாங்குகின்றாய்
ஆண்மகனா நீ தம்பி?
மூச்சுக்கு மூச்சு இடைவேளை ஏற்படட்டும்—பின்
பேச்சுக்குத் துவக்கம் செய்!" என்றாள், அந்தக்
கிண்டலுக்குப் பேர்போன கிழட்டுத் தமிழச்சி
வேடிக்கை நேரம் இது வல்லபாட்டி—உன்
"வாடிக்கைக் கேலியை விட்டுவிடு
மடிந்தான் உன் மகன் களத்தில்" என்றான், — மனம்
ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி ஒருமுறை.
"தாயம் ஆடுகையில் காய்களை வெட்டுவதுண்டு—
களமும் அதுதான்,
காயம் மார்பிலா? முதுகிலா? கழறுவாய்' என்றாள்,
"முதுகில் என்றான்.
கிழவி துடித்தனள், இதயம் வெடித்தனள்,
வாளை எடுத்தனள்
முழவு ஒலித்த திக்கை நோக்கி முடுக்கினாள் வேகம்!
கோழைக்குப் பால் கொடுத்தேன்—குப்புற
வீழ்ந்து கிடக்கும்
மோழைக்குப் பெயர் போர் வீரனாம்! முன்பொருநாள்
பாய்ந்து வந்த ஈட்டிக்குப்
பதில் சொல்ல மார்பைக் காட்டிச்
சாய்ந்து கிடந்தார், என் சாகாத கண்ணாளர்
அவருக்குப் பிறந்தானா! அடடா! மானமெங்கே!
குட்டிச்சுவருக்கும் கீழாக வீழ்ந்து பட்டான்
இமயவரம்பினிலே வீரம் சிரிக்கும்; —இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்;
அதுவும் மானம் மானமென்றே முழக்கும்!
மதுவும் சுராவும் உண்டுவாழும்
மானமற்ற வம்சமா நீ? ஏடா?
மறத்தமிழ்க் குடியிலே மாசு தூவிவிட்டாய்!
மார்பு கொடுத்தேன்; மகனாய் வளர்த்தேன்.
தின்று கொழுத்துத் திமிர்பாய்ந்த தோள் எங்கே?
தினவெடுக்கவில்லையா? அந்தோ!
வேலுக்கு வழிசொல்ல வகையற்ற கோழையே! என் வீரப்
பாலுக்கு வழி சொல்வாய்!"
என்று கதறினாள். எண்பதை நெருங்கிய ஏழைக் கிழவி.
சென்றங்கு செருமுனையில் சிதறிக்கிடந்த
செந்தமிழ்க் காளைகளைப் புரட்டிப் பார்த்தாள்—அங்கு
நந்தமிழ் நாட்டைக்காக்க ஓடிற்று இரத்தவெள்ளம்!
பிணக்குவியலிலே பெருமூச்சு வாங்க நடந்தாள்.
மணப்பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை;
மகன் பிறந்தபோதும் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டு!
அவன் இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி!
இதைக் கண்டாள்—இதயங்குளிர்ந்தாள்;
"எதைக் கண்டாலும் இனிக்கவில்லையில்லை;
என்மகன் வீரனாய் இறந்தான்" என்றாள்
"அறுத்தெறிய இருந்தேன் அவன் குடித்த மார்பை
அடடா!
கருத்தெரியப் பொய்ச்சொன்ன கயவன் எங்கே?
வாளிங்கே! அவன் நாக்கெங்கே"?

—இந்த வீர இசையைத் தலைவர் முடித்தார். பந்தல் அதிர்ந்தது, கைதட்டலால்! கையொலி ஓய்ந்த பிறகு தலைவர் சொன்னார்:

"இந்தப்பாட்டு நான் எழுதியதில்லை. இதோ இருக்கிறாரே; இந்த மணமகன் எழுதியது" என்று உற்சாகத்தோடு உரைத்தார். மீண்டும் பந்தல் அதிர்ந்தது! பக்கத்திலிருந்தபுதுப்புறுவின்இளங் கன்னங்கள் ரோஜாவாயின. இதயம் எப்படி மலர்ந்ததோ யாரறிய முடியும்? தலைவர் வாழ்த்துரையை முடித்தார், பரிசுகள் வழங்கும் படலம் ஆரம்பமாயிற்று. மணமகளின் உள்ளத்தை அருகிலிருந்த மணமகனைவிட அதிகமாக உணரக்கூடிய சக்தி வாய்ந்த ஓர் உருவம் அந்தப் பந்தலிலே அமர்ந்திருந்தது. அதுதான்மணமகளின்தோழி விஜயா. கமலாவும் விஜயாவும் கல்லூரியில் மட்டுமல்ல; இளமையிலேயே இணை பிரியாதவர்கள். விஜயா இல்வாழ்க்கைப் பாதையிலே பயணம் நடத்திக்கொண்டிருப்பவள். கமலா இன்று தான் அடியெடுத்து வைக்கிறாள் கந்தனின் கை கோர்த்தபடி.

அறிஞர்களின் பாராட்டுக்குரிய ஓர் அன்புத் துணை தன் தோழிக்குக் கிடைத்தது கண்டு விஜயாவுக்கு அளவிடமுடியாத மகிழ்ச்சி

அந்த ஆனந்தத்தில் மெய்மறந்திருந்தாள். கணவன் மணமேடையில் புகழப்படும் போதெல்லாம் கமலா, விஜயாவைக் கெண்டைக் கண்ணால் பார்த்ததை விஜயா மட்டுமே உணர முடிந்தது, பரிசளிப்புகள் முடியும் தறுவாயிலிருந்தன. இன்பவெள்ளத்தில் எல்லாவற்றையும் மறந்திருந்த விஜயா திடுக்கிட்டு எழுந்தாள். பரபரப்புடன் மணமேடைக்கு ஓடினாள். தன் கையிலிருந்த ஒரு தாள் சுருளைப் பிரித்தாள்;

'கண்ணே, கமலா ......!
நீ அதிர்ஷ்டசாலி. இதைப் பெற்றுக்கொள். நம் அன்பின் அடையாளமாக!
எந்த நெருக்கடி வந்தாலும் சரி, இந்த அன்புச் சின்னத்தை மறந்து விடாதே! சந்தனக் கிண்ணம் — உன் உள்ளம் சந்தோஷக் கிண்ணமாயிருப்பதை விளக்கும் சின்னம்!"

என்று கூறிக்கொண்டே கமலாவைத் தழுவிக் கொண்டாள். ஆனந்தக் கண்ணீர் பொழிந்தாள். கமலாவும் கண்கலங்கிவிட்டாள்சந்தோஷத்தால். வாழ்வின் ஆரம்ப விழா அரும்பிவிட்டது.

குடும்பம் குதூகலமாய்த் துவங்கியது. கமலா கொஞ்சம் பழமைப் பித்துப்பிடித்தவள். காதலர்களுக்குள் ஊடல் ஏற்படுவதெல்லாம் பழமை—புதுமைச் சண்டையினாலேயே என்ற நிலைமை சில நாள் தொடர்ந்தது. பிறகு இருவருமே கடவுள்களைக் கேலி செய்ய ஆரம்பித்தனர்.

"பரமசிவனையும் பார்வதியையும் தினம் தினம் பள்ளியறைக்குப்பல்லக்கில் தூக்கிக்கொண்டு போகிறார்களே பக்தர்கள்...! ஆனால் அவளுக்குக் கணபதி, முருகன் இருவரைத் தவிர வேறு குழந்தைகள் பிறக்கவே இல்லையே! ஏன்?" என்பான் கந்தன்.

'தெரியாதா உங்களுக்கு? அவர்கள் கர்ப்பத்தடை செய்து கொண்டார்கள்' என்று சிரிப்பாள் கமலா.

"கடலிலே மீனை வெள்ளைக்காரனும் பார்த்தான் நாமும் பார்த்தோம்"... என்று ஆரம்பிப்பான் கந்தன்.

"வெள்ளைக்காரன் மீனைப் பார்த்து சப்மரீன்செய்தான்; நாம் மச்சாவதாரம் செய்தோம்!' என்று முடிப்பாள் கமலா.

இப்படி வளர்ந்தது அவர்களின் இன்பவாழ்வு. இந்தப் புதிய ஜோடி கண்டு கந்தனின் தாய் களிப்படைந்தாள் என்றாலும், "கமலாவும் இப்படியெல்லாம் கடவுளைத் திட்டுகிறாளே! அடுப்பங்கரையில் கிடக்கவேண்டியவளுக்கு இந்த வம்புகள் எல்லாம் ஏன்?" என்ற ஆத்திரம் மெல்லத் தலைநீட்ட ஆரம்பித்தது.

வெளிப்படையாகக் கண்டித்தால் மகனுக்கு வருத்தம் வருமேயென்று ஜாடைமாடையாகக் கண்டிக்கத் தொடங்கினாள். அப்படிக் கண்டனங்கள் கிளம்பும் போது காதலனின்இன்முகத்தை நினைத்து கமலா ஆறுதல் பெறுவாள். அதுமட்டுமல்ல; அவள் தோழிவிஜயா அடிக்கடி சொல்லியிருக்கிறாள்:

"வீட்டிலிருக்கிற பெரியோர்களின் மனதை நோக விடும்படி நடக்காதே. அனுசரித்து நட!" என்ற பொன்மொழிகளை.

அவற்றை நினைத்துக் கொள்வாள் கமலா. உடனே ஓடிப்போய் அவள்கொடுத்த அன்புப் பரிசை— அந்தச் சந்தனக் கிண்ணத்தை எடுத்து முகத்திலே அணைத்துக்கொள்வாள். சந்தனக் கிண்ணத்தின் விளிம்புகளிலே அவள் தன் ஆருயிர்த் தோழியின் உயிர்த் துடிப்புள்ளஇதழைக் காணுவாள். அந்தக் கிண்ணத்தின் பளபளப்பிலே தோழியின் சிரிப்பைக் கண்டு துள்ளியெழுவாள். காதலன் வீட்டில் இல்லாத நேரத்தில் அவளுக்குப் பேச்சுத் துணை சந்தனக் கிண்ணந்தான்! மாமியாருக்கு மருமகள் மீது ஏற்பட்ட கோபம் அவள் வலுவில் பேசவந்தாலும் அதிகமாகப் பேசுவது கிடையாது. பால்ய தோழி — பள்ளித் துணை விஜயா அந்தக் கிண்ணத்திலே தன் கன்னத்தைக் காட்டிக் கமலாவை விட்டுக் கிள்ளச் சொல்லிக் கொண்டேயிருந்தாள். கிண்ணத்திலே மின்னும் 'விஜயா' என்ற எழுத்துக்கள் கமலாவிடம் எத்தனையோ பழங்கதைகளைச் சொல்லும்கமலாவும் கண்ணை மூடிக்கொண்டு அந்த இன்பக் கதைகளைக் கேட்பாள்.

*

திடீரென்று நாட்டிலே தீப்பொறி கிளம்பிற்று தமிழை ஒழிக்கத் தருக்கர்கள் படை திரட்டினர். அதற்குத் தடைபோடத் தரணியாண்ட இனத்தவர்புறப்பட்டனர். வடநாட்டு இந்தி மொழி ஏகாதிபத்தியம் திராவிடத்திலே திணிக்கப் பட்டது. அதைஎதிர்த்துமொழிப் போர் வீராவேசமாக மூண்டது.

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!" என்ற கவிதையை முழங்கியவாறு தமிழர் பட்டாளம் கிளம்பிற்று. சிங்கங்கள் சிறைபுகுந்தன. சிசுக்களுடன் பல தமிழ்த்தாய்களை அடக்கு முறையின் கோரவாய் விழுங்கியது. மொழி காக்கப்போன இருவர்— தாளமுத்து, நடராசன்எனும் மாவீரர்கள்— தம் மூச்சைக் காக்க முடியாமல்ஆக்கப்பட்டனர், இந்தி வெறியர்களால். தமிழகமெங்கும் கொதிப்பு— குமுறல்— புயல்!

★

கமலா பலகணி வழியாக வீதிப்புறத்தைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கையிலே அந்தச் சந்தனக் கிண்ண மிருக்கிறது சந்தனக் கிண்ணத்தோடு பேசி முடித்தாகி விட்டது. இப்போது அவள் எதிர்ப்பார்ப்பது அலுவலகத்திலிருந்து திரும்பும் கந்தனை.

கண்களும் வலிக்கத்துவங்கி விட்டன; கந்தனைக் காணோம் ஒரு பெரு மூச்சோடு பலகணியை விட்டு அகல முயன்றாள். அமைதியாயிருந்த தெருவிலே ஓர் அலைமுழக்கம் புறப்பட்டது. பரபரப்போடு கமலா பலகணி வழியாகப் பார்வையைச் செலுத்தினாள்.

"தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! தாளமுத்து—நடராசன் புகழ் வாழ்க!" என்று பரணி பாடியபடி ஒரு தமிழர் பட்டாளம் பவனி வந்து கொண்டிருந்தது. ஔவைக் கிழவிபோன்ற ஒருமூதாட்டி கம்பீர நடை போட்டுக் கையிலே கொடிஏந்திப்பிறை வளைந்த கூனல் எப்படி நிமிர்ந்தது என, பார்ப்போர் ஆச்சரியப்படும்படி அந்த அணிவகுப்புக்குத் தலைமை வகித்துச் சென்றாள், நெடிது உயர்ந்த சேரன்— செங்குட்டுவனோ வந்துவிட்டான் என அதிசயக்கத்தக்க அளவுக்கு வாட்டசாட்டமான ஒரு மனிதர் — அஞ்சாசெஞ்சர் — படையின் தளபதியாக வீர நடை போட்டார். அந்தப் புலிநிகர் மாந்தர்களின் ஒலி முழக்கம் கமலாவை வீறு கொள்ளச் செய்தது.

திருமணத்தன்று, 'காதலிலே கவிதையிலே களம் போகும் பேச்சு! கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!" என்று தலைவர் சொன்ன கவிதை நினைவுக்கு வந்தது. நினைவு அலைகளிலே சுழன்று கொண்டிருந்த அந்த ஏந்திழையை ஒரு குரல் திடுக்கிட வைத்தது.

"தமிழ் வாழ்க!" — தென்றல் நடையிலே!"

"இந்தி ஒழிக!" — புயல் நடையிலே!

இரண்டு நடையிலும் கிளம்பிய ஒலிகந்தனுடையது தான்! கமலா வெளியே ஓடி வந்தாள். கந்தன், கையிலே கொடியேந்தியவாறு ஆவேசமுடன் அந்தப் பட்டாளத்தில் பவனி வந்தான். கமலா கூட்டத்துக்குள் ஓடினாள். கந்தனைப் பிடித்து நிறுத்தினாள். கந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஐயோ, கூட்டத்திலேயுள்ள கொள்கை வீரர்கள் தன்னைப் பற்றித் தவறுக நினைக்கக் கமலா இடமளித்து விடுவாளோ என்று கலங்கினான். கமலா ஆத்திரத்தோடு கேட்டாள்:

"இந்தி எதிர்ப்பிற்கு உங்களை யார் போகச் சொன்னது?"

இதைக்கேட்டுக் கந்தன் விழித்தான். ஆனால், கமலா வார்த்தையை முடிக்கவில்லை ...இப்போதுதான் முடித்தாள்!

"...என்னை விட்டுவிட்டு?" என்று!

"இந்தி எதிர்ப்பிற்குஉங்களை யார் போகச் சொன்னது, என்னை விட்டுவிட்டு!" என்ற மொழி கேட்டதும் மூதாட்டி ஓடிவந்து கமலாவை அணைத்துக் கொண்டாள். மீண்டும் தமிழ் முழக்கம் தொடர்ந்தது, ஊர்வலம் அந்த வீதியைத் தாண்டியது. போலீசார் பாய்ந்தனர். புள்ளிமான் கூட்டத்திலே புலியென! வேட்டுச் சப்தம் வேதனை ஒலி, "தமிழ் வாழ்க!" என்ற போர்முரசம், அத்தனை பேரையும் சிறைச்சாலைக்கு "வாருங்கள்" என வரவேற்றது அதிகாரத் திமிர்.

கமலாவும் கந்தனும் சிறைச்சாலையிலே, 'கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!" என்பதை மோகனத்திலே முணுமுணுத்துக் கொண்டிருந்தனர்.

அடக்குமுறை தர்பார் துவண்டது. இந்தி வெறியர்கள் 'இனிப் பலிக்காது நம் முயற்சி' என மிரண்டனர். கட்டாய இந்தி, கடையைக் கட்டியது! தமிழர்படைவென்றது. வீரர் உலாப் பாடினர்; கட்டாய இந்தி, கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று! வென்றது மொழிப் போர்!

*

கமலாவும் கந்தனும் தமிழ் காத்த தடந்தோள்களிலே வெற்றி மாலை சூடி, வீட்டுக்குத் திரும்பினர். "வீண் வேலையில் ஈடுபட்டாய், இனி வேலை கிடையாது உனக்கு!" என்ற ஆபீஸ் உத்தரவும் அவனுக்கு முன் வீட்டுக்கு வந்திருந்தது. தாயாரோ புகையும் எரிமலையாக இருந்தாள்

"அம்மா உனக்கு ஒரு கேடு என்றால் துள்ளியெழ மாட்டேனா நான்? அது போலத்தான் தாயே, தாய் மொழியைப் பழித்தவரை எதிர்த்தேன்; இது குற்றமா அம்மா?" என்று அழுதான் கந்தன். மகனைவிட மருமகள் மீது அதிக ஆத்திரம் அந்த மாதாவுக்கு.

வேலையற்ற நிலை—வேலை கிடைக்காத நிலை, வேதனை வாழ்வு, வேலையில்லாத கந்

(10-ம் பக்கம் பார்க்க)

போலீசாரின் பொறுப்பற்ற போக்கு:

அரசு செய்யப் போவது என்ன?

ஒரு கொலை, ஒரு கடத்தல் ஒரு கற்பழிப்பு, ஒரு கொள்ளை அல்லது ஒரு வழிப்பறி நடக்காமல் டில்லியில் ஒரு நாளும் பொழுது விடிவதே இல்லை.

போக்குவரத்தைச்சிரமைக்கப் போதிய திறனற்ற போலீசார் இருப்பதால், சாலைவிபத்துக்களில் மட்டும் மாதமொன்றுக்கு ஐம்பது பேர் உயிரிழக்கும் இந்தியாவின் தலைநகரான டில்லியில், போலீசார் உண்மையில் செயல்படுகிறார்களா அல்லது உயிரோடு உலாவும் வெறும் 'பிணங்களாகத்' திரிகிறார்களா என்ற கேள்விக் குறியைப் பலர் எழுப்புகிறார்கள். இந்தக் கேள்வி — புறக்கணிக்க முடியாத, நியாயமான கேள்விதான்!

வாழ்வின் வசந்த காலத்தில் அடியெடுத்து வைத்த பதினேழு வயதேயான கீதாவும், பதின்மூன்று வயதான அவளுடைய தம்பி சஞ்சயும் படுகொலை செய்யப்பட்ட துயர நிகழ்ச்சி இந்தியா முழுக்க ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அந்த இளந்தளிர்களின் உயிர் மீட்கப்பட்டிருக்கலாம் —ஆம், போலீசார் சற்று அக்கறை காட்டியிருந்தால்!

இளவயதினராக இருந்த போதும் கீதாவும், சஞ்சயும் கொலைகாரர்களோடு கடுமையாகப் போரிட்டிருக்கிறார்கள்!

போக்குவரத்து நெரிசலும், மக்கள்நடமாட்டமும் நிறைந்த சாலையில் அவர்களைக் கடத்திச் சென்ற காரினுள்ளிருந்து இருவரும் உரத்துக் குரல்வேறு கொடுத்திருக்கிறார்கள்:

"காப்பாற்றுங்கள் ...காப்பாற்றுங்கள்...உதவி...உதவி" என்று.

பரிதாபகரமான அக்குரலைக்கேட்ட பொதுமக்களில் சிலர், போலீஸ் நிலையத்திற்கு இரண்டு முறை தொலைபேசி மூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால்,

அதைப் போலீசார் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. தான் பெற்றசெல்வங்கள்இன்னும் வீடு திரும்பவில்லை என்று சோப்ரா போலீஸ் நிலையத்தில் புகார் செய்தபோது கூட அவர்கள் சொன்ன பதில் என்ன தெரியுமா?

"இது எங்கள் ஆளுகைக்குட்பட்ட இடத்தில்நடக்காததால் நாங்கள் தலையிடமாட்டோம்..." என்பதே.

கடத்தப்பட்ட காரையோ கொல்லப்பட்ட இளந்தளிர்களின் பிணங்களையோ கூடப் போலீசார் கண்டுபிடிக்கவில்லை. வழிப்போக்கர்கள் சொன்ன பிறகுதான் அவர்களுக்குத் தெரிந்தது,

கடைசியாக—

கொலைகார பில்லாவையும் அவனுடைய கூட்டாளி இரங்காவையும் பிடித்தது கூடப் போலீசார் அல்லர்; இராணுவ வீரர்கள் சிலரின் ஒத்துழைப்பு இல்லாதிருந்தால் (அதிலொருவர் முத்துப்பாண்டியன் என்ற தமிழ் இளைஞர்) கொலைகார பில்லா இறுதி வரை சிக்கியிருப்பானாஎன்பது சந்தேகமே.

ஏனென்றால்—

காவலில் இருந்தபோதே போலீசாரின் 'கண்களில் மண்ணைத்தூவி' இரண்டு

பழனி சித்தார்த்தன்

தடவை தப்பிச் சென்றவன் பில்லா; அப்படித் தப்பிச் சென்ற பிறகும்கூட அவனொன்றும் காடுமேடுகளில் தலைமறைவாக வாழ்ந்தவனல்லன்; எல்லோரையும் போலவே அவனும் டில்லியிலிருந்து ஆக்ராவுக்கும், ஆக்ராவிலிருந்து பம்பாய்க்கும், மீண்டும் பம்பாயிலிருந்து டில்லிக்குமாக இரயிலிலும், பஸ்ஸிலும் பயணம் செய்துகொண்டேயிருந்தான் போலீசாரும், அவனை 'வலை' போட்டுத் தேடுவதாகச் சொல்லிக் கொண்டார்கள்...

எப்படியோ – கொலைகாரர்கள் அகப்பட்டுக் கொண்டதை நினைத்து நிம்மதிப் பெருமூச்சு விடாமல் இருக்க முடியாது.

ஆனால்—

குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க வேண்டிய சில போலீசாரே குற்றவாளிகளாக மாறி விடுகிறார்களே...

இந்த அபாயகரமான போக்கு எந்தப் பேரழிவில் கொண்டு போய் நிறுத்துமோ தெரியவில்லை. இதோ: நெஞ்சத்தை நடுநடுங்கச் செய்யும் ஒரு துயரமான கதை—

உத்தரப் பிரதேசத்திலிருக்கும் கதகோன் என்ற கிராமத்தில் மூன்று இளைஞர்கள் அண்மையில் கொல்லப்பட்டார்கள். அவர்கள் மூவரும் நக்சலைட்டுகள் என்றும், ஒரு வீட்டில் ஒளிந்திருந்த அவர்களைப் போலீசார் சுற்றிவளைத்துக் கொண்டபோது தப்பிச் செல்ல வழி அற்றவர்களாய் அவர்கள் தங்களைத் தாங்களே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்கள் என்றும் போலீசார் ஒரு 'கதை' கட்டி விட்டார்கள்:

உண்மையில் நடந்தது என்ன வென்றால்—

அந்த கிராமத்து வயல் காட்டுப் பக்கம் புல் அறுத்துக் கொண்டிருந்தனர் பத்து, பன்னிரண்டு இளம் பெண்கள், அப்போது அங்கு வந்த விஜய சிங், இராம் மூர்த்தி என்ற இரண்டு போலீசார் அந்தப் பெண்களிடம் குறும்புத்தனங்கள் செய்து, முறைகேடாக நடந்து கொள்ள முயற்சித்தனர். ஆத்திரமடைந்த அந்தப் பெண்கள்—தங்கள் கற்பைக் காத்துக் கொள்ள 'புலியெனச் சீறியுள்ளனர்; அந்தப் போலீசார் வைத்திருந்த துப்பாக்கிகளைப் பிடுங்கி அவற்றாலேயே அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள்; இந்தத் தாக்குதலால் விஜய்சிங் என்ற போலீஸ் மாண்டு போனான்.

இன்னொரு போலீசான இராம்மூர்த்தி, தப்பிப்பிழைத்தவனாக ஓடிவந்து போலீஸ் நிலையத்தில் புகார் செய்தான். உடனே –

போலீஸ் பட்டாளமொன்று கிராமத்திற்கு விரைந்தது; கிராமத்தையே சூறையாடிய பிறகு, முப்பது இளைஞர்களைக் கைது செய்து போலீஸ் நிலையத்தில் அடைத்து ஈவிரக்கமில்லாமல், மிருகத்தனமாகத் தாக்கி, பின்னர் விடுவித்திருக்கிறார்கள். மீண்டும் –

போலீஸ் பட்டாளம் கிராமத்தைச் சூறையாடிய பிறகு, முப்பது வயதான இராம்தார் படேல், இருபத்திரண்டு வயதான இராம்தார் யாதவ், பதினேழு வயதான இராம்தார் சஜிவன்—என்ற மூவரையும் கைது செய்தது. இம்மூவரும் போலீசாரைத் தாக்கிய பெண்களில் ஒருத்தியின் சகோதரர்கள்.

கைது செய்து அம்மூவரையும் கிராமத்திற்கு அப்பால் இழுத்துச்சென்ற போலீசார் அவர்களை அங்கே சுட்டுக் கொன்று விட்டார்கள்!

கொன்ற பிறகு –

பிணங்கள், அவர்கள் 'ஒளிந்திருந்ததாகச் சொல்லப்பட்ட வீட்டிற்கு எடுத்து வரப்பட்டன; அப்பிணங்களுக்கு அருகே சில சீனத்துச் சிவப்பு இலக்கியங்களையும், பிரசுரங்களையும், ஆயுதங்களையும் எடுத்துவந்து

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

பெரியார் - அண்ணா புகழ் ஓங்குக!

'நம்நாடு' முதலாண்டு நிறைவு நாளில் வாசகர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் எங்களது நல் வாழ்த்துக்கள்!

லைன், ஆப்-டோன் மற்றும் பல பிளாக்குகள் சிறந்த முறையில் குறித்த நேரத்தில் குறைந்த செலவில் தயாரிக்கும் இடம்

சாமுண்டிஸ்வரி பிராசஸ்

14, மகாலட்சுமிதெரு, சென்னை - 600017

தொலைபேசி: 440433

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00

ஆறுமாத சந்தா ரூ. 12-50

மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சனிதனிகளால் ஏற்படும் இழப்பு...?

அரசு நிர்வாகத்தில் உள்ளவர்களின் மூட நம்பிக்கையின் விளைவாக அரசுக்கு பல இலட்சக் கணக்கான ரூபாய் இழப்பு எற்படும் நிலை உண்டாகியிருக்கிறது,

அண்மையில் வெளியிடப்பட்ட பகவத்கீதை அஞ்சல் தலையில் அஞ்சலக முத்திரை குத்த வேண்டாம் என்று நிர்வாகம்கட்டளை பிறப்பித்துள்ளதாம். முத்திரை குத்தினால் அதன் 'புனிதம்' கெட்டுவிடும் என்று நிர்வாகம் கருதுகிறதாம்.

புதுடில்லியைச் சேர்ந்த சந்தீப் முகர்ஜி என்பவர் 'நியூ ஏஜ்' ஆங்கில வார இதழ் ஆசிரியருக்கு (3-9-78-ல்) எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

இருபத்தைந்து காசு 'பகவத்கீதை' அஞ்சல் தலைகள் ஒட்டப்பட்ட இரண்டு கடிதங்கள் கடந்த வாரம் எனக்கு வந்தன.

முதல் கடிதத்தில் ஒட்டப்பட்டிருந்த அஞ்சல் தலையில் அஞ்சலக முத்திரை குத்தப்படாது இருந்ததைக் கவனித்த நான், அதனை, அஞ்சலகப் பணியாளர்கள் அறியாது செய்த ஒரு தவறென்று கருதினேன். ஆனால் இரண்டாவது கடிதத்திலிருந்த 'பகவத்கீதை' அஞ்சல் தலையின் மீதும் முத்திரை குத்தப்படாது இருந்தது. அதைக்கண்ட நான், பணியாளர்களால் ஏற்பட்ட தவறல்ல அதுஎன்பதைஉணர்ந்துகொண்டேன்.

'பகவத்கீதை' அஞ்சல் தலைகளின் மீது முத்திரை குத்துவது, அதனுடைய 'புனிதத்திற்கு' இழுக்கு என்பதால், அவை மீது முத்திரை குத்தக்கூடாது என்று அஞ்சல் துறையினருக்கு நிர்வாகம் கட்டளையிட்டிருப்பதாகப் பின்னர் நான் கேள்விப்பட்டேன்.

இதனுடைய விளைவு என்னவாகுமென்றால், முத்திரை குத்தப்படாத இந்த அஞ்சல் தலைகள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படும்; அதனால் அஞ்சல் துறைக்கு சேரவேண்டிய வருமானம் குறைந்து பேரிழப்பு ஏற்படும்.

ஆனால், அஞ்சல் துறையோ, இந்த அஞ்சல் தலையில் பொறிக்கப்பட்டுள்ள வேதவாக்கையே நம்பிக்கொண்டு செயல்படுகிறது.

அதாவது 'விளைவைப்பற்றிக் கவலைப்படாமல் உனதுகடமையைசெய்'என்பதே அந்த வாக்கு!

தமிழின் தனித் தன்மையைக் கெடுக்காதீர்!

★

ஐயா!

பிறமொழிகளில் வழங்கும் எல்லா வகையான எழுத்துக்களையும் விட, இப்போது தமிழில் வழங்கிவரும் எழுத்துக்கள்தாம் மிகவும் திருந்திய அமைப்புடையவையாகும். தமிழிலுள்ள, உயிரும் மெய்யும் கூடிப்பிறக்கும் "உயிர்மெய்களின் அமைப்பு, பிற இந்திய மொழிகள் எவற்றிலும் காணப்படாதனவாய விளங்கும், முற்றிலும் ஒழுங்குற அமைந்துள்ள ஒரு முறை. எடுத்துக்காட்டாக:'க்–அ – க' 'ம்–அ –ம'என்பனவாம். இவ்வாறே, வடமொழியிலும், பிறவிந்திய மொழியிலுமுள்ள,மூச்சொலி கலந்த உச்சரிப்புடைய எழுத்து வடிவங்களாகிய, 'ஹ்ஹ' (Kha) 'ங்ஹ' (ga) 'ங்ஹ்ஹ' (:ha) முதலியனவும் இவற்றின் இன எழுத்துக்களும், தமிழுக்குச் சிறிதும் தேவையில்லாதனவாகும். ஏனெனில் இவை, ஐயப்பாட்டினையும் குழப்பத்தையுமே உண்டாக்கும். வடமொழிமுதலியவற்றில் சிறந்த மேதையாக விளங்குகின்றவர்கள்கூட சில நேரங்களில் அவ்வளவாக வழக்கிலில்லாத சில வட சொற்களில் எந்த 'ஹ'-இன எழுத்தைப் பயன்படுத்துவதென்பதில்குழப்பமடைகின்றனர் என்பது யாவருமறிந்த உண்மையாகும்.

இத்தகையதொன்றே'ஹ'-இன எழுத்துக்கள் இயல்பானவையல்ல என்பதையும் பகுத்தறிவற்றதும் தேவையற்றதுமான எழுத்துக்கள் என்பதையும் காட்டுகின்றது. இத்தகைய குழப்பங்களுக்கெல்லாம் அடிமைப்படாத இனம், இந்தியாவிலேயே தமிழினம் ஒன்றேயாகும். இத்தகைய சொந்தச் சிறப்பும் நிகரற்ற தனித்தன்மையும் கொண்ட அமைப்புடைய தமிழ்மொழி, பிறமொழிகளுக்காக மாற்றியமைக்கப்படுமாயின், அத்தமிழுக்கு இஃதொரு பேரிழப்பாகும்.

பிறமொழிகளின் ஒலியமைப்பு முறைகள் எல்லா மொழிகளிலுமே மாற்றியமைக்கப்படுதல் தேவையற்றதாகும். அடையாளப் புள்ளிகளாலும் குறியீடுகளாலுமே பிறமொழி ஒலியமைப்பினை ஒருவாறு உணர்த்தலாம்; அதுவும் அடிக்கடி தேவையில்லை. ஏனெனில் பிறமொழிகளின் ஒலியமைப்பு, மற்ற மொழிகளுக்கு மிகவும் அரிதாகவே தேவைபடுகின்றது. எந்த மொழியிலாவது, பிறமொழிச் சொற்களை உச்சரிக்கும்போது நாம் உணரும் குறைபாடுகளுக்கு அவ்வளவாகச் சிறப்பிடம் தரவேண்டியதில்லை. ஏனெனில் ஒரு மொழி செம்மையானது என்பதை அம்மொழியிலுள்ள சொற்களைக் கொண்டுதான் மதிப்பிட வேண்டுமொழிய மற்றமொழிகளின் உச்சரிப்பைக் கொண்டு அன்று.

— ஏ. கிருஷ்ணன்,
ஆத்தூர்; (குமரி மாவட்டம்)

—நன்றி "இந்து"— செப். 15, '78 (ஆசிரியருக்கு — மடல்)

போலீசாரின் பொறுப்பற்ற போக்கு..) (8 ம்பக்கத் தொடர்ச்சி

போட்டிருக்கிறார்கள் போலீசார். அவர்களை நக்சலைட்கள் என்று சொல்லித் தங்களின் கொலைக் குற்றத்தை மறைக்க முயன்ற போலீசாரின் நாடகத்தை அம்பலப்படுத்தி விட்டார்கள், வித்தியாசங்கர் பாண்டே — சங்கம்லால் என்ற இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள்!

ஒரு போலீஸ் அதிகாரி அம் மூவரும் 'தேடப்பட்டு வந்த கொள்ளைக்காரர்கள்' என்றார்.

இன்னொரு போலீஸ் அதிகாரி அம்மூவரும் நக்சலைட்டுகள் என்றார்.

பாவம் —

அம் மூன்று சகோதரர்களில் இருவர், விவசாயிகள். இளைய சகோதரன் 'இண்டர் மீடியட்' படிக்கும் மாணவன். அவர்களுக்கும் அரசியலுக்கும் துளிகூடத்தொடர்பு இருந்ததில்லை.

இந்தியா முழுக்க நிலைமை இவ்வாறு இருக்க—

மத்திய அரசின் உள்துறை அமைச்சரான எஸ். டி. படீல் போலீசாரின் பொறுப்பற்ற, காட்டுமிராண்டித்தனமான செய்கைகளைக் கண்டிக்கவில்லை மாறாக,

"போலீசாரையே குறை கூறுவதால் பலனென்றும் ஏற்படாது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் போலீசாரோடு பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும்...' என்று 'வக்காலத்து' வாங்குகிறார்.

பொதுமக்கள் போலீசாரோடு ஒத்துழைக்க மனப்பூர்வமாக விரும்புகிறார்கள்.

ஆனால்—

போலீசார் பொதுமக்களோடு 'எப்படி ஒத்துழைக்கிறார்கள்' என்பதுதான் கேள்வி!

—"இதுபோன்ற நிகழ்ச்சிகள் (கீதா, சஞ்சய் படுகொலை) பிற நாடுகளில் நடந்திருந்தால் இந்நேரம் அந்த அரசுகளே ஆட்டங் கண்டிருக்கும்; இங்கேயோ — இது குறித்து நாம் கேள்விகள் கேட்டால் வீற்றிருக்கும் அமைச்சர்கள் வெறுமனே புன்னகை சிந்துகிறார்கள். எதற்காக வேண்டி அவர்கள் இப்படிப் புன்னகை பூக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை...ஒவ்வொரு அமைச்சருக்கும், பிரமுகர்கள் என்று சொல்லப்படுகின்ற ஒவ்வொருவருக்கும் நீங்கள் பாதுகாப்புத் தந்திருக்கிறீர்கள்... அவர்கள் ஒவ்வொருவரையும் சுற்றி ஏராளமான பாதுகாப்புப் படையினர் இருக்கிறார்கள் — அவர்களில் சில பேரின் உயிரை யாரும், எதற்காகவும் பறிக்கமாட்டார்கள் என்ற போதும்! ஏனென்றால், அந்தச் சிலரின் வாழ்க்கை எதற்கும் இலாயக்கில்லை என்று குற்றவாளிகளே கருதுகிறார்கள்.........நம்முடைய பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் போதுமான பாதுகாப்பு அளிக்கப்பட்டாக வேண்டும்''

நாடாளு மன்ற உறுப்பினர் புபேஷின்'இந்தக் கருத்துக்கு இந்திய அரசு செவி சாய்க்குமா?

'அண்ணா என்னும் அன்புத் தென்றல்!'

வெண்பாவில் கனிச்சீர்கள் வந்த தேபோல்
வெண்சோற்றில் பன்றிகள்வாய் வைத்த தேபோல்
பண்ணெழும் யாழ்நரம்பை வெட்டி விட்டு
பாதையிலே வெடிகுண்டு வைத்த தேபோல்,
புண்ணாக்கி நம்மைத் குனியவைக்க
புறப்பட்ட புயற்காற்றைத் திருப்பி விட்டுத்
திண்டாட்டம் தனைபோக்கி தடுலைக் காத்துத்
தென்றலன்புத் தந்தவர்நம் அறிஞர் அண்ணா'
பதவிக்குப் பலருண்டு பல்லைக்காட்டி
பணஞ்சேர்க்கும் குண முண்டு தாவித்தாவி
உதவிக்குப் பயன்பட்ட ஏணி தள்ளி
ஊர்மய்க்கும் உதவாத கூட்ட முண்டு;
மதங்கொண்டு யானையெனத் தன்ன லத்தால்
மக்களையெல்லாம் மாக்களென நினைப்போருண்டு;
கதவில்லா ஏழைமன வீட்டுக் கண்ணீர்க்
கண்விலங்கை உடைத்தவர்நம் மேதை அண்ணா!
கைகாயும் வரைக்கும்தான் போற்றி நிற்பார்;
காரியத்தில் சூரர்களாய் கவடு வைப்பார்;
பைநிரப்பும் பணிவாழ பாசம் வைப்பார்;
பலிகொள்ளப் பகட்டிணைத்துப் பக்கம் சேர்வார்;
மைவாழும் உளஉருவ வடிவம் காட்டி
மனிதர்களாய் வாழும்வழி பாதை சொல்லி
தைத்தளிராய்த் திட்டங்கள், பெரியார் கொள்கை
தழைத்திடவே ஆண்டவர்நம் உயிராம் அண்ணா!

— புலவர் பொன்னியின்செல்வன்

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல்நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

உரிமையாளர்
பே. தேவசகாயம்
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்தி மிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
12. அழகர்கோவில் சாலை, 72 டவுன்ஹால்ரோடு, மதுரை.

சந்தனக் கிண்ணம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தன் இயக்க வேலையிலேயே முழு நேரமும் ஈடுபட்டான். அந்த ஊர் செயலாளர் அவன் தான். கந்தனைத்தெரியாதார் யாருமில்லை. அவன் புகழ் வளர்ந்தது. ஊரிலே இயக்கச் சார்பிலே ஒரு பொதுக்கூட்டம்; எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டான். சொற்பொழிவாளருக்கு வழிச்செலவுக்கு இருபதுரூபாய் அனுப்பியாக வேண்டும்.

பணம் வசூல் ஆகவில்லை. கூட்டம் நின்றுவிடக்கூடாதே யென்று துடித்தான். வீட்டிலே நிம்மதியின்றி அலைந்தான். சிறைச்சாலையிலே கமலாவுக்குச் சரியான உணவும் பாதுகாப்புமின்றி உடல் நலம் கெட்டது. அது ஏழ்மையின் காரணமாகத் தொடர்ந்தது. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தை வாங்கித் தரப் பணமில்லை. வீட்டிலிருந்த வெள்ளிச் சாமன்களையும் விற்றுச் சாப்பிட்டாகி விட்டது. சந்தனக் கிண்ணம் ஒன்றுதான் பாக்கி வெள்ளியிலே!

"அதை விற்றுவது மருந்து வாங்கிக்கொடேன்!" என்றுள் தாயார்.

அவனுக்கு அதைவிற்க மனம் வரவில்லை. மனைவியின் தோழி அளித்தது, அந்தக் கிண்ணம். ஆகவே மறுத்து விட்டான். இப்போது சொற்பொழிவாளருக்கு அனுப்பப் பணம் இல்லையென்றதும் அவன் விழிகள் அந்தக் கிண்ணத்தைத் தேடின. நோயுற்றிருந்த கமலா தூங்கிக் கொண்டிருந்தாள். கைகள் நடுங்கக் கந்தன் சந்தனக் கிண்ணத்தை எடுத்தான். அடகு வைத்துப் பெற்ற பணத்தைச் சொற்பொழிவாளருக்கு அனுப்பினான்.

★

கூட்டம்குறிப்பிட்டபடி ஏற்பாடாகியது. புகைவண்டி நிலையத்துக்குக் கந்தன் புறப்பட்டான், சொற்பொழிவாளரை வரவேற்க!

அப்போது அவன் தாய் கமலாவைத் திட்டிக்கொண்டிருந்தாள், கூர்ந்து கவனித்தான். சந்தனக்கிண்ணத்தை கமலா தொலைத்துவிட்டாள் என்பதுதான் தாயின் குற்றச்சாட்டு. காய்ச்சலோடு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் கமலா, எதுவும் பேசாமல் அழுதுகொண்டிருந்தாள். தன் அருமை விஜயா காணமற் போய்விட்டதை நினைத்துக் கண்ணீர் விட்டாள். தன் கண்களைத் துடைத்துக்கொண்டு கந்தன் புகைவண்டி நிலையத்திற்கு ஓடினான். புகைவண்டி வந்தது. ஆனால் கூட்டத்திற்கு வரவேண்டிய சொற்பொழிவாளர் வரவில்லை. அசையாமல் அப்படியேநின்று கந்தன் விம்மிவிம்மிஅழுதுவிட்டான். தன்னுடைய வீட்டுக்காரியத்திற்குஒருவர் வருவதாயிருந்து வராமல் போனாலும் பரவாயில்லை. பொதுக்காரியம்— பொதுமக்களிடம் பணம் வசூல் செய்து பொது மக்களை ஏமாற்றுவ... என ஏங்கினான். மேடைக்கு வந்து மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். மக்கள் முணுமுணுத்தபடி கலைந்தனர்.

வீட்டுக்கு வந்தான். கமலாவுக்குக் காய்ச்சல் அதிகமாகிவிட்டது. கண்களிலே ஒளி குறைந்துவிட்டது. தாயார் பக்கத்திலே அமர்ந்து அழுதுகொண்டிருந்தாள். கந்தன் ஓடிவந்து "கமலா! கமலா!" என்று அலறினான். அவள் மெல்ல வாய் திறந்தாள். "அத்தான், அந்தச் சந்தனக் கிண்ணம்" என்று இதழசைத்தாள். "கமலா, அதை நான்தான் திருடி அடகு வைத்திருக்கிறேன் — பணம் வந்ததும் மீட்டுவிடலாம்" என்று கதறினான். அவன் கதறலிடையே கமலா கண்ணை மூடினாள் பிறகுதிறக்கவேயில்லை; கந்தன் அழுதான் அழுதுகொண்டேயிருந்தான்.

இப்போது கந்தன் ஏழையல்லன்; பணக்காரனாயில்லாவிட்டாலும் பணவசதி இருக்கிறது.

இருபதுரூபாய்க்குஅடகு வைத்தசந்தனக்கிண்ணத்தை வட்டியோடு முப்பது ரூபாய் கொடுத்தால் மீட்டுவிடலாம்

ஆனால்,

அதை மீட்டு யாரிடம் கொடுப்பது? கமலாவாஇருக்கிருள் அவளிடம் கொடுக்க? அவளைத்தான் இந்திவெறியர்களின் சிறைச்சாலை, கொஞ்சம் கொஞ்சமாக விடுதலைக்குப்பிறகும்விடாமல்கொன்றுவிட்டதே

கந்தன் சந்தனக் கிண்ணத்தை மீட்டுவிடத் தயாராயிருக்கிறான். எப்போது? மீண்டும் இலட்சியப் போரின் வெற்றி விழாவிலே, வீரர்களுக்குச்சந்தனம் வழங்கும் சந்தர்ப்பம் வருமே; அப்போது!

●

★★★★★★★★★★★★★★★★★★★★★★



வாழ்க காந்தி- காமராசர் புகழ்!



அக்டோபர் 2. அண்ணல்காந்தியடிகளின் பிறந்தநாளாகும்.

காந்திபிறந்தநாளைக்கொண்டாடும் அதே வேளையில் காமராசரை நினைந்து போற்றும் நாளாகவும் அமைந்துவிட்டது.

ஆம்! காந்தி பிறந்த அக்டோபர் இரண்டாம் நாள்தான் காமராசர் மறைந்த நாள்.

அண்ணல் காந்தியின் அடிச்சுவட்டில் நடைபோட்டவர் 'காலா காந்தி' என்று வடநாட்டில் உள்ளவர்களாலும் பாராட்டப்பட்டவர்— 'பச்சைத் தமிழர்' என்று தந்தை பெரியாராலும், 'படிக்காதமேதை'என்று தமிழ் மக்கள் அனைவராலும் பாசத்தோடு அழைக்கப்பட்டவர்காமராசர்.

நாடு காந்தியவழியிலிருந்து மாறி, சர்வாதிகாரம் நோக்கிச் சென்றதைக் கண்டு மனங் கொதித்து அதன் காரணமாகவே மரணப் படுக்கையாகி விட்டவர் காமரரசர்.

கடைசிக் காலத்தில் தம்மைப் பார்க்க வந்த கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் கையைப் பிடித்துக்கொண்டு, கண்கலங்கி 'தேசம் போச்சு ஜனநாயகம் போச்சு' என்று கதறியவர் காமராசர்.

அவர் மறைந்தபோது அவருக்கு அரசு மரியாதைகளுடன் இறுதிக் கடனாற்றி, கிண்டியில் காந்தி நினைவகத்துக்குப் பக்கத்திலேயே நினைவகம் ஏற்படுத்தியதும், அவரது விருது நகர் வீட்டை விலைக்கு வாங்கி நினைவுச் சின்னமாக்கியதும் நமது கலைஞர் தலைமையில் இருந்த கழக அரசு ஆகும்.

காந்தியும் காமராசரும் ஒரு கட்சிக்கே சொந்தக்காரர்கள் என்ற நிலையைக் கடந்து நாட்டு மக்கள் அனைவருக்கும்சொந்தக்காரர்களாகிவிட்டவர்கள்.

'மாற்றான் தோட்டத்துமல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற பேரறிஞர் அண்ணாவின் வழிவந்தவர்கள் நாம். எனவே காந்தியாரின் கள்ளம் கபடமற்ற தேசியத் திருப்பணியை அவரது தியாகத்தை மதித்துத் தலை வணங்குகிறோம்.

காந்தியின் வழிவந்த தியாகச்சுடராம் காமராசரை நினைந்து அவர்தம் தன்னலங் கருதாதத் தொண்டுக்கு என்றும் நன்றிக் கடன் பட்டவர்கள் தமிழர்கள் என்பதையும் மறவாமல், அன்னாருக்கு நமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்க காந்தி— காமராசர் புகழ்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★

டில்லியில் நான் ஒரு அந்நியன்

(3—ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதிக்கம் செலுத்திய அரசியலமைப்புக்குப் புறம்பான அதிகார மையம், குடியேற்ற ஆதிக்கக் கண்கொண்டு தென்னாட்டவர்மீது வெளிப்படையாகவே நிந்தனையை உமிழ்ந்து கொண்டிருந்தது. இந்த நிந்தனை மனப்போக்கு கிஞ்சித்சித்தும் குறையாமல், வடநாட்டவர் அனைவரையும் ஆட்கொண்டது. தென்னாட்டு அதிகாரிகள் மாற்றப்பட்டார்கள்; அவமரியாதை செய்யப்பட்டார்கள். அது மட்டுமல்ல; வெளிப்படையாகப் புலப்படாவிட்டாலும் கூட, கடந்த சில ஆண்டுகளாக வடக்கு — தெற்குத் தொடர்புகள் குறைந்து கொண்டே வருவதைத் தெளிவாகக் காணமுடிகிறது.

இந்தச் சமயத்தில் முன்னாள் தலைமை அமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கொண்ட அசாதாரணமான உறவை நினைவு கூர்தல் வேண்டும்.

ஒரு பிராந்தியக் கட்சியென்றும், குறுகிய கொள்கையுடையதென்றும், ஏன், பிரிவினைக்கட்சியென்றும் வர்ணிக்கப்பட்ட தி. மு. கழகம், 1971 தேர்தலின்போது தேர்தல் உறவு கொள்வதற்கு உகந்த கட்சியாகக் கருதப்பட்டது. தேசிய அளவிலான அரசியல் ஆதாயத்தைக் கருத்தில் கொண்ட அவர், தென்னாட்டில் தமது கட்சியின் வேரையேவெட்டிவிடுவதற்கும் தயரானார்; தமது கட்சியை தி. மு. கழகத்திடம் முழுமையாகச் சரணடையச் செய்தார். ஒரு முழுமையான தேசீய இயக்கத்தை அன்றையத் தலைமை எந்த அளவுக்கு அலட்சியப்படுத்தியது என்பதை இந்தத் துரோகம் அம்பலமாக்கியது.

இன்றைய ஆட்சித் தலைவர்களும், தங்களுடைய வழியில் குறுகிய மொழிக் கொள்கை யொன்றை ஒரு வகை வெறியோடு தீவிரமாகக் கொண்டு செலுத்த முனைவதன் மூலம், இந்த அக்கறையின்மையைத் தொடர்ந்து கடைபிடித்து வருகிறார்கள். அதாவது, மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஆணவமும் அசட்டையும் அதனை ஆட்கொண்டு விடுகின்றன.

(தொடரும்)

★

டாக்டரை நேரில் சந்திக்க

முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம். உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற

பழனி டாக்டர்
எஸ். காளிமுத்து
R.M.P. (IND. V. V. C. A. I. H.)
பழனி — 624601

என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும், சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்.

போன்: 316, 316 ஏ, 420 தந்தி: சித்தரி

இனம் காக்கும் இலட்சிய வரலாறு-..

(12 ப்பக்கத் தொடர்ச்சி)

வரும்போது, முடங்கிக் கிடக்காது என்று முழங்கினர் நம் தலைவர் கலைஞர்.

“எப்பக்கம் வந்து புகுந்து விடும்— இந்தி எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?”
என்றும்

“இந்திக்குத்தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்— நீங்கள்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!” என்றும்

எழுச்சிப் பண் பாடிய பாரதிதாசனின் வரிகளை மீண்டும் உச்சரித்துக் கிளம்ப வேண்டிய காலம் நெருங்கி விட்டதை உணர்த்தினர் நம் ஒப்பற்ற தலைவர்.

ஆணைக்காகக் காத்திருக்கும் தமிழ்ப் புலிகளுக்கு, பாயும் நேரம் நெருங்கிவிட்டது,என்ற முன்எச்சரிக்கைக்குரலைமட்டும் இப்போது கொடுத்திருக்கிறார் நம் ஏந்தல். போராட்டமா? சிறையா? அவை என்ன எங்களுக்குப் புதியவையா?

“மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை” என்றெல்லாம் எரிமலையை எச்சிலைத் துப்பியே அணைத்து விடும் வல்லவர் கூட்டம் தமிழ்த் தலைவனுக்கு வாழ்த்துச் சொன்னது.

பண்டித நேருவின் உறுதிமொழி—ஜனதாவின் தேர்தல் வாக்குறுதி போல் காற்ருேடு போகாமல்’ அரசியல் அமைப்பிலும் இடம் பெற வேண்டும் என்ற வீர முழக்கத்தால் விண்ணதிரச் செய்தார் நம் கலைஞர்.

தேசிய மொழிகளை யெல்லாம் தேக்கி வைத்திருக்கும் அணையைப் போன்றது ஆங்கில மொழி என்று அவர் அழகாகச் சொன்ஞர்

அணையை உடைத்தால், அந்த வெள்ளத்தில் வடக்கு மூழ்கி விடும் என்ற மறை வாசகத்தை அவர் சூசகமாகச் சொல்லி வைத்தார்.

ஒரு இலட்சம் தொண்டர்கள் தயாராகவேண்டும் என்ற கலைஞரின் வேண்டுகோளுக்கு “கரும்பு தின்ன எதற்குக் கூலி?” என்றது காளையர் கூட்டம்.

அன்று நடந்த திருநாள் தமிழன்உறங்கிக்கொண்டிருக்கவில்லை என்பதை உலகுக்குணர்த்தும் ஒப்பற்ற நாள்!

நாங்கள் உறங்கும் புலிகள்! குருடர்களே! இடருதீர்கள் என்பதைத் தமிழ்ப் பகைவர்களுக்கு உணர்த்திய நாள்!

தமிழர் தலைவனின் விரலசைவுகளுக்கு இந்தப் பேரண்டத்தையே புரட்டிப் போடும் ஆற்றல் உண்டுஎன்று அவனிக்குச் சொல்லும் நாள்!

தி. மு. க. என்பது ஒரு கட்சியல்ல; தமிழ் இனத்தின் தொடரும் வரலாறு என்பதை எடுத்துக் காட்டும் நாள் அந்த இனிய நாள்!

தலைவனின் வார்த்தைகளைச் சொல்லிச் சபதமெடுப்போம்! தமிழுக்கொரு தீங்கென்ருல் தீயாய் நிமிர்வோம் இனமானம் காக்கும்இலட்சிய வரலாற்றைப் படைப்போம். இன்னுயிரைத்தந்தேனும் இனியமொழி தமிழ்த் தாயைக் காப்போம்; தாயகத்தைத்தரணிதனில் தலைமைக்கு ஏற்றுவோம். இது உறுதி! இது உறுதி! என்றே நாம் முழங்குவோம்.

கொலு பொம்மையல்ல... கோலோச்சுபவர் !

குமாரச்சேரியான்

அனைத்து அரசியல் பாதைகளும் இன்று குடியரசுத் தலைவர் மாளிகையை நோக்கிச் செல்கின்றன. குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டியின் மீது அனைவரின் பார்வையும் விழுந்திருக்கின்றன. அரசியல் நடவடிக்கையின் போக்கு இன்று சப்தர்ஜங் சாலையிலிருந்து இராஷ்டிரபதி பவனத்துக்குத்திசைதிரும்பி மாறியிருக்கிறது.

குடியரசுத் தலைவர் மாளிகையில் உயர்மட்ட அரசியல் நடவடிக்கைகள் மர்மமான முறையில் மொய்த்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. உயர் மட்ட அளவில் கையூட்டுகளை ஒழிப்பதில் மொரார்ஜி அரசு தவறி விட்டதை குடியரசுத் தலைவர் எண்ணி மிகவும் அதிர்ச்சிக்கு ஆளாகியிருக்கிருர். தன்னை வந்து சந்திக்கின்ற முக்கியமானவர்களிடமெல்லாம் வெளிப்படையாகவே இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிருர்கள்.

மிக விரைவில் எதிர்பாராத நடவடிக்கையைக் குடியரசுத் தலைவர் மேற்கொள்வார் போல் தெரிகிறது என்று அவரைச் சந்தித்துத் திரும்புகின்றவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அரசியல் வாதிகளில் பலர் அதிகாரத்தில் உள்ளவர்களும், இல்லாதவர்களும் விரைந்து சென்று வாயில்களைத் திறந்தே வைத்திருக்கின்ற குடியரசுத் தலைவரைச் சந்திக்கின்றனர் அறிவுரை கேட்கின்றனர். அவருக்குச் சிலர் யோசனைகளை அளித்துவிட்டு வருகின்றனர்!

தனக்கு முன்பு இருந்தவர்களைப் போல் சஞ்சீவரெட்டி ‘ரப்பர் ஸ்டாம்ப்’பாகஇருக்கவில்லைதேசியநலனில்அக்கறை செலுத்துபவராக பாதுகாப்பாளராக விளங்குகிருர்.

கடந்த வாரத்தில் தலைமையமைச்சரை சந்தித்து நாற்பத்து ஐந்து நிமிடங்கள் உரையாற்றியிருக்கிருர். முன்னள் உள்துறை அமைச்சர் சரண் சிங்கோடு எண்பது நிமிடங்கள் பேசியிருக்கிருர். முன்னள் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியோடு ஐம்பது நிமிடங்கள் கலந்துரையாடியிருக்கிருர்; பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராமுடன் முக்கால் மணி நேரத்திற்கு மேல் உரையாடியிருக்கிருர்.

அதற்கு முன்பாக குடியரசுத் தலைவர் ஐதராபாத்திற்குச் சென்றபோது அதுல்ய கோஷை அழைத்துப் பேசினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் கட்சி சார்பின்றி அவரைப் பார்த்து இன்றைய அரசியல் நிலைமைகளை விவாதித்துச் செல்லுகின்றனர்.

சுரேஷ் – சுஸ்மா காதல் விளையாட்டு சம்பந்தமான புகைப்படங்களை வைத்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் கால்யாண் ஜெயினையும் வரவழைக்கச் செய்து அதனைவாங்கிப்பார்த்தார். விவரங்களை மேலும் கேட்டறிந்தார்,

காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனு ஒன்றைக் குடியரசுத் தலைவரிடம் கொடுத்தனர். அவர்களைக் கூட்டிவைத்து உரையாடினர். அப்போது அவர் “நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற அனைத்து நிகழ்ச்சிகளையும் நான் அறிவேன். இதில் என்னுடைய பங்கு சங்கடமானதே” என்று கூறியுள்ளார்.

“தேசிய நலனைமுன்னிட்டு ஏற்பட்டுவிட்ட புண்களை ஆற்றிட எல்லாருடைய கருத்துகளைக் கேட்டறிந்து செயல்படுவேன்” என்று கூடியிருந்தவர்களிடம் எடுத்துக்கூறி ஆறுதல் படுத்தியிருக்கிருர்.

ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களிடையே குடியரசுத் தலைவரின்நடவடிக்கையானது குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கிறது. பிடிவாத போக்குள்ள மொரார்ஜிக்கு இது பெருத்த ஆவலைத் தூண்டியுள்ளது.

இந்தநிலையில் வழக்கத்திற்கு மாருக ஜனதா கட்சியின் பொதுச்செயலாளர் நானஜி தேஷ்முக்கை குடியரசுத் தலைவரிடம் அனுப்பிவைத்தனர். தலைமை அமைச்சரை மீறிச் செயல்படக் கூடாது என்று திட்டவட்டமான வாக்குறுதியைப் பெற முயன்றனர்.

தலைமையமைச்சர்பதவிக்கு மொரார்ஜிக்கு மாருக வேறு ஒருவரைஉருவாக்குகிருராஅல்லது அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதில் அக்கறை செலுத்துகிருரா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும் என்கிருர்கள்.

மொரார்ஜியின் சந்திப்புகள் வழக்கமான ஒன்றே. காந்திபாய் தேசாயின் அத்துமீறிய நடவடிக்கைகளும், லஞ்சத்தில்ஈடுபடுவதாககூறப்படும் குற்றச்சாட்டையும் நாடே எண்ணி வேதனைஅடைவதுபோல் குடியரசுத் தலைவரும்எண்ணுகிருர். இந்நிலையில் தன் மகனைபலமாக ஆதரித்து முட்டுக் கொடுக்குமொரார்ஜியின் நிலையை குடியரசுத் தலைவர் வெளிப்படையாகவே ஏற்கவில்லை. இதைப்பற்றி மேலும் தன்னுடைய கருத்தினை பகிரங்கமாக வெளிப்படுத்தியும் இருக்கிருர்.

“தந்தைக்கு உள்ள நல்ல பெயரை மகன் கெடுத்து விடுகின்ற நிலை ஏற்படக் கூடாது எப்படி இராஜாஜியின் பிள்ளைகள் தமது தந்தையின் புகழிலும் நற்பெயரிலும் வாழ விரும்பவில்லையோ அதைப் போல் மற்றவர்களும் தங்களுடைய வாழ்க்கையைக் கடைபிடிக்க வேண்டும். நல்ல வேளையாக காமராசருக்கு மகனே, மருமகனே இல்லாமல் போய் விட்டார்கள்.”

இதுவரை தேர்ந்தெடுக்கப் பட்ட குடியரசுத் தலைவர்களைப் போல் சஞ்சீவ ரெட்டி தலைமை அமைச்சரின் வேட்பாளர் அல்ல, எனவே தேசாய்க்கு கட்டுப்பட்ட நிலை ஏற்படவில்லை. எனவே இவர் நாட்டின் உணமையான தலைமைச் சின்னமாக விளங்கி வருகிருர். எல்லா அரசியல் கட்சியின் தலைவர்களுடைய மதிப்பையும், மரியாதையையும் பெற்றுள்ளார். இலஞ்சத்தை ஒழிக்கும் பணியில் ஈடுபடும் இவரை, பொது வாழ்க்கைத் தூய்மையைப் பேணும் இவரை. சிலர் வேண்டுமானல் வெறுக்கலாம்: தூற்றலாம்.

தலைமை அமைச்சர். அவருடைய சில உடனமைச்சர்களுடையநடவடிக்கைகள் குடியரசுத் தலைவருக்குப் பிடிக்கவில்லை. இது ஒன்றும் இரகசியமான ஒன்றல்ல. அவர் தலைமை ஏற்று தேசிய அரசாங்கத்தைஅமைத்திடவேண்டும் என்ற சிலருடைய ஆலோசனைகளையும் அறவே ஒதுக்கித் தள்ளி விட்டார். என்ருலும் தான் ஒரு அமைதியான பார்வையாளனுக இருந்திட முடியாது என்றும் பொறுப்பிலே உள்ளவர்களுக்குத் தெளிவுபடுத்தி விட்டார். நாட்டுக்கே ஒரு மனச் சோர்வினையும், தாழ்வினையும் தேசாய் அரசாங்கம் உண்டாக்கிவிட்டதை எண்ணி மனவேதனை அடைந்திருக்கிருர்.

காந்தி பாய் தேசாயின் கூலிப் படைகள் சில தேசிய நாளிதழ்களில் தன்னைப்பற்றி எதிர்த்து எழுதி வரும் போக்கினை எண்ணி குடியரசுத் தலைவர் வேதனையை வெளிப்படுத்தி யிருக்கிருர்.

டில்லியிலிருந்தும், பம்பாயிலிருந்தும் வெளிவரும் ஒரு நாளிதழின் ஆசிரியர் குடியரசுத் தலைவரை எதிர்த்து தொடர்வெடியைத்தொடங்கியிருக்கிருர். அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்திற்குள்இவருடைய நடவடிக்கை இருக்கவேண்டும் இவர் தலையிடுகிற அளவுக்கு நாட்டில் எதுவும் நடந்துவிடவில்லை என்றும் அந்த ஆசிரியர் எழுதுகிருர். காந்திபாய் தேசாயின்ஊழலுக்கும்,இலஞ்சத்திற்கும் துணை நிற்கின்ற வகையில் குடியரசுத்தலைவரை எச்சரிக்கிருர், குடியரசுத் தலைவர் தலையிடுவதில் எந்தவித நியாயமும் இல்லை. தேசப் பிரச்சினையைத்தீர்க்கின்றநிலை ஒன்று இருக்குமானல் அதை தலைமை அமைச்சர் மட்டுமே தான்நிறைவேற்றலாம்; குணப்படுத்துகின்ற பணியிலே ஈடுபடலாம் குடியரசுத் தலைவர் இதில் ஈடுபடத்தேவையில்லை என்றும் துணிவோடு எழுதுகிருர்.

இப்படிப்பட்ட – வேண்டுமென்றே நடத்தப்படும் பத்திரிகைப் பிரச்சாரம் குடியரசுத் தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையில் பிளவை உண்டாக்கும். வரலாறு காணுத ஓர் அரசியல் சட்டச் சிக்கல் உருவாகலாம். இந்த ஆபத்தான நிலை ஏற்படாது இருக்கத் தலைமை அமைச்சர் செய்யப்போவதென்ன? குடியரசுத் தலைவர் வெறும் கொலு பொம்மையல்ல...கோலோச்சுபவர்!

ஆதாரம்:

‘கரண்ட்’ (23.9.78)

★

M.K. TRADERS MK MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை. 24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை 28
திறமையுள்ள ஆண் — பெண் கேன்வாசர்கள் தேவை.

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

இனம் காக்கும் இலட்சியவரலாறு!

சா. கணேசன்

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கூடிய மக்கள் வெள்ளத்தை நேர்முக வர்ணனை செய்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் "இது கடல் அலையா? அல்லது காண வந்த மக்கள் தலையா?'' என்று வர்ணித்தார்,

செகம் புகழும் செப்டம்பர் திங்கள் 24 - ஆம் நாளன்று சென்னை மாநகரத்தின் சாலைகள் நிரம்பிவழிய தமிழினத் தலைவர் கலைஞரின் தலைமையில் கண்ணப்பர் திடலில் மக்கள் கூட்டம் வெள்ளமெனத் திரண்டது.

திருவல்லிக்கேணி தேரடி நோக்கிப்புறப்பட்ட அந்தப்பிரமாண்ட ஊர்வலத்தைப்பார்த்தபோது சென்னை மாநகரம் கலைஞரின் வரிகளைத்தான் வியப்போடு மீண்டும் உச்சரித்துக் கொண்டது:

"இது கடல் அலையா? அல்லது கலைஞரைக் காண வந்த மக்கள் தலையா?''

எத்தனை எழுச்சி! எத்தனை உணர்ச்சி! மூன்று இலட்சம் மக்களின் முழக்கம், சென்னை மாநகரின் நெடுஞ்சுவர்களையெல்லாம் மோதிவிட்டுத்திரும்பியது. கழகக் கண்மணிகளின் கால்சுவடுகளால் சென்னையின் கறுப்புத் தார்ச்சாலைகள் எல்லாம் முத்திரை பெற்றன.

அலங்கார வண்டிகள்! இன்னிசைக் கருவிகள்! கரக ஆட்டங்கள்! புரவி ஆட்டங்கள்! நையாண்டி மேளம்! சிலம்பாட்டம்! இவை உள்ளடங்கிய மூன்று இலட்சம் பேர்களின் மாபெரும்ஊர்வலம்.

அடடா! எள்போட்டால் எண்ணெய் எடுக்கலாம் என்றல்லவா சொல்வார்கள். ஆனால் அன்றைய ஊர்வலத்தில் எள் போட்டால் எண்ணெய் வரும். ஆனால் அதை எடுக்க முடியாது — அப்படியோர் கூட்டம்!

முப்பெரும் விழா! தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்த நாள்! தமிழினத்தின் துயர்துடைக்கும் கழகத்தின் தொடக்கநாள் தங்கம் நிகர் தலைவர் கலைஞரும், பெருமைமிக்கபேராசிரியரும், சாதிக்பாட்சாவும், இளம் பெரியார் ஆசைத்தம்பியும் இன்னபிற முன்னோடிகள் எல்லாம் சென்னைமாவட்டசெயல் வீரர் தோழர் சீதாபதிஅமைத்திட்ட சிங்கார ஊர்தியில் சீரோடும், செருக்கோடும் அமர்ந்திருந்தனர். அந்தஊர்தி மக்கள் வெள்ளத்தில் மிதந்தே சென்றது.

வீதிகளெல்லாம் விழாக் கோலம் பூண்டிருந்தன. ஊர் வலம் செல்லும் வீதிகள் புத்தாடை பூண்டதுபோல், புதுக் கோலம் கண்டதுபோல் இருவண்ணக்கொடித் தோரணங்கள் எழிலூட்டிக்கொண்டிருந்தன. இந்தியாவிலேயே இதுவரை பிரம்மாண்டமான ஊர்வலங்களை நடத்தி சரித்திரத்தைப் படைத்து வந்த தி. மு. கழகம்தான் புதிய சிறப்பை மேலும் படைத்திட — வரலாற்றுப் புகழ்மிக்க ஊர்வலங்களை மிஞ்சிடும் வகையில் புதிய சரித்திரத்தைப் படைத்துக் காட்டியிருக்கிறது.

இந்தப் புதிய சரித்திரத்தைப் படைத்தவர்கள் யார்? பூமான்களா? கோமான்களா? தொழிலதிபர்களா? நிலப்பிரபுக்களா? இல்லை! இல்லை! சாலையோரத்தில் படுத்துக் கிடக்கும் சாமான்யர்கள், ஆலைகளிகளி`ல பாடுபடும் தொழிலாளர்கள்; நிலத்தில் உழைக்கும் விவசாயிகள், அன்ருடங் காய்ச்சிகள், நடுத்தரக் குடும்பத்துத் தோழர்கள்இவர்களே இந்த இயக்கத்தின் நாடி நரம்புகள் மன்றத்தைக்காத்திடும் மறவனுக கிளைக் கழகத்தைக் கட்டிக்காத்திடும் வீரனுக பகுதிக் கழகத்தை வழி நடத்தும் பட்டாளத்துத் தோழனுக திகழ்ந்து வரும் தோழர்களின், தொண்டர்களின், பட்டாளத்துச் சிப்களின் தளபதி சீதாபதியும் சேர்ந்து நடத்திய ஊர்வலமே இன்று மக்கள் கவனத்தையே ஈர்த்திருக்கிறது.

கலைஞர்பெருமகனுரின்கண்ணசைவுக்காகவும், கையசைவுக்காகவும் காத்துக்கிடக்கும் காளையர் கூட்டம், அவரது உற்சாகச் சைகை கண்டு உவந்தெழுந்து ஆடியது.

தமிழினத் தலைவரைக் கண்டு வாழ்த்துக் கூறியும், வணங்கியும் நின்ற ஊர்வலத்தின் இருபுறத்து மக்களும் மகிழ்ச்சிப் பெருக்கில் மயங்கிக் கிடந்தனர். அவர்களைப் பார்த்து நன்றிகூறும் தன்மையில் கலைஞரின் கைகளோ அசைந்து ஓய்ந்து விட்டன. ஆனால் அவரது அசையாத உள்ளம் மட்டும் முகத்தில் முறுவல் காட்டி நின்றது.

வானுலகப் பூமாரியினை நாம் புராணங்களில்தான் படித்திருக்கிறோம். கலைஞருக்கும் பூமாரி பொழிந்தது — ஆனல், வானுலகிலிருந்தல்ல.. இல்லங்களின் மாடிகளிலிருந்து.

அந்த வரலாற்று நாயகனின் குரல் கேட்க வேண்டுமென்று கூடிவந்த தமிழ்க்குலம், அவரது சைகைகளில் கூட ஆனந்தம் அடையும் அதிசயம் நிகழ்ந்ததங்கே!

முப்பெரும் விழாக் கூட்டம், ஏதோ கோயில் உற்சவத்திற்குக் கூடும் திருவிழாக் கூட்டமல்ல; பொழுதுபோக்க வந்தவரின் உல்லாசக் கூட்டமல்ல...

பகுத்தறிவுப்பகலவன் பெரியாரும், அறிஞர் அண்ணுவும் இந்த மண்ணுக்கு விட்டுச் சென்ற தத்துவங்களை அவர்கள் நனவாக வேண்டுமென்று நாளெல்லாம் கண்டு வந்த நல்ல கனவுகளைத் தோளேந்தி நிற்போம், துடிப்போடு முடிப்போம், இந்தத் திருமண்ணில் இன்னொரு பொற்காலம் ஏற்படுத்துவோம் என்று மார் தட்டுகின்ற மறவர்களின் கூட்டந்தான் அன்று கூடிய கூட்டம்.

இந்த நாட்டின் இனத்திற்கும் மொழிக்கும் ஊறு வந்தால் ஊர் திரளும் என்று எச்சரிக்கும் கூட்டந்தான் அன்று எழுந்த கூட்டம். தேர்த் திருவிழாக்களுக்கு மட்டுமே கூட்டம் திரளும் அந்தத் தேரடித் தெருவில்; மானம் காக்கும் தமிழ்த் தலைவனின் இலட்சிய முழக்கம் கேட்பதற்காகக் கூடிய தமிழ்க் கடலின் ஓசை விண்ணைப் பிளந்தது.

அந்த மக்கள் கடலின் அக்கரையில் எழுச்சி முழக்க மிட்டார் நம் இனத் தலைவர். தமிழ் காக்கும் பணிக்காகவும், இனம் காக்கும் இலட்சியத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற கழகம், மொழிக்கு ஆபத்து

(தொடர்ச்சி11-ம் பக்கம்)



நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்திய சேலம் இரும்பாலை தொழிலாளர் மீது தடியடி நடத்தியும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைவிசியும் அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்ட போலீசார், பெண்களையும் தாக்கினர் (செய்தி)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயணசெட்டிதெரு, இராயபுரம், சென்னை-600013) அச்சிட்டுவெளியிடப்பட்டது. நிர்வாகஅலுவலகம், 'அன்பகம்'508 அண்ணாசாலை, தேனம்பேட்டை சென்னை-600018தொலைபேசி 441009.